# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

மே 2024

தீபம் 12 சுடர் 12

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



**இறையேசுவில் பிரியமானவர்களே,**

மே மாதம் என்றாலே அன்னை மரியாளின் மாதம். இதை சிறப்பாய் கொண்டாட திருஅவை நம்மை அன்போடு அழைக்கின்றது. இம்மாதத்தில் அன்னை மரியாளின் பக்தியானது உலகமெங்கிலும் பக்தி பாசத்துடனும், நம்பிக்கையுடனும் உற்சாகமாக, கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கொண்டாட்டம் ஒவ்வொரு பங்கிலும் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் செபமாலையுடன் கூடிய திருப்பலியும், தேர்பவனியும், சிறப்பு மறையுறைகளும் அன்னை மரியாளின் புதுமைகளை நினைவுக் கூர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னை மரியாளை குடும்பமாகவும், அன்பியங்களாகவும், தங்களின் பங்குகளில் வரவேற்று அவரின் புகழ்பாடி அவரை வணங்கி, செபித்து, சிறப்பு செய்ய இவ்வணக்க மாதத்தை நாம் வரவேற்று சிறப்பு செய்வோம்.

பாரம்பரியமிக்க இவ்வணக்கமாதா பக்தி முயற்சி, 13ம் நூற்றாண்டில் துவங்கியது. பொதுவாக தொடக்கக் காலத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாதவர்களால் கொண்டாடப்பட்ட ஒரு பொது விழாவை, கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் இப்பொதுவிழாவைத் தழுவிக்கொண்டு இந்த பொது கொண்டாட்டத்தை மரியன்னையின் வணக்க மாதமாகச் சிறப்பித்துக், கொண்டாடி வந்தார்கள். 18ம் நூற்றாண்டில் இந்த வணக்கமாதா கொண்டாட்டம், குறிப்பாக இயேசு சபையினரிடையே மிகவும் புகழ்பெற்று விளங்கியது. பிறகு இந்த பக்தி கொண்டாட்டம் உலகமெங்கும் பரவியது.

வணக்க மாதத்தில் மரியன்னை பக்தி முயற்சி பல திருத்தந்தையர்களால் ஊக்குவிக்கப்பட்டது. திருத்தந்தை பதினோராம் பத்திநாதர், திருத்தந்தை ஆறாம் சின்னப்பர், மற்றும் புனித இரண்டாம் ஜான்பால் போன்றோர்களால் இப்பக்தி முயற்சி புகழ்பெற்று மிகுந்த மகிழ்வுடனும், நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும், மரியன்னையை புகழ்ந்துப்பாடி, செபித்து, அவரை பெருமைப்படுத்தி, வணங்கி கொண்டாடியது.

நமது அன்னை மரியாளின் எடுத்துக்காட்டான வாழ்வும், அவரின் அர்ப்பண வழிகாட்டுதலும், சிறப்பாக அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து, தூய ஆவியின் வல்லமையால் கடவுளின் சித்தப்படி நடந்து நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும், தூண்டுதலாகவும் இருக்கின்றார். மரியன்னையின் வணக்க மாதா பக்தி முயற்சி குறிப்பாக பாஸ்கா காலத்திலும், தூய ஆவியாரின் வருகை காலத்திலும் அதிலும் சிறப்பாக திருமுழுக்கு, உறுதிபூசுதல், நற்கருணை போன்ற அருட்சாதனங்களால் மரியன்னையின் பக்தி சிறப்பானதாக உணர்ந்துக் கொண்டாடப்படுகிறது. எனவே, இவ்வன்னைக்கு செபமாலை செய்து, பாடல்பாடி, தேர்பவனியில் கலந்துக்கொண்டு, திருப்பலியில் பங்கேற்று இம்மாதத்தை வணக்கத்துடன் கொண்டாட நம்மை அழைக்கிறது.

இறுதியாக திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் சொல்வதுபோல வணக்கமாதம் அருளின் மாதம், கடவுளின் அருட்கொடைகளையும், இரக்கத்தையும், அன்பையும் கொண்டாடும் மாதம். மரியன்னையை நாம் கொண்டாடுவதிலும் அவள் புகழ் பாடுவதிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கொண்டாடி, அவர் புகழ்பாடி நம் அன்னையை மகிழ்விப்போம்.

என்றும் அன்புடன்

*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*

*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

**01.05.2024 தொழிலாளர் புனித யோசேப்பு** **திருப்பலி**

**முன்னுரை** திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்புக்குரியவர்களே, தொழிலாளரான புனித யோசேப்பு நினைவை நாம் இன்று சிறப்பிக்கின்றோம். எல்லாவற்றையும் படைத்த கடவுளின் மகனான இயேசுவும், அவரது தாய் மரியாவும் புனித யோசேப்பின் பராமரிப்பில் ஒப்படைக்கப் பெற்றிருந்தனர். யோசேப்பு தச்சுத் தொழிலில் ஈட்டிய பணத்தைக் கொண்டு தமது குடும்பத்தின் உறுப்பினர்களான இயேசுவையும் மரியாவையும் அன்புடன் பராமரித்தார். கடவுளுக்கும் மற்றும் அவரது தாய்க்கும் தேவையான அனைத்தையும், தமது உழைப்பினால் கிடைத்த வருவாய் வழியாக யோசேப்பு நிறைவேற்றினார். நற்செய்திகள் இயேசு கிறிஸ்துவை ஒரு தச்சரின் மகனாக அடையாளம் காட்டுவதிலிருந்து, யோசேப்பு ஒரு தச்சராக வாழ்ந்தார் என்பதை அறிகிறோம். நாசரேத்தில் தச்சுத் தொழிலாளராக வாழ்ந்த யோசேப்பு, ஒரு நேர்மையாளர் என நற்செய்தி சான்றுப் பகர்கிறது. "என் நுகம் அழுத்தாது" என்ற இயேசுவின் வார்த்தைகள், புனித யோசேப்பு அவரை ஒரு சிறந்த தச்சராக உருவாக்கினார் என்பதைக் காட்டுகின்றன. நாமும் உழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாய், நமது தொழிலால் பிறருக்கு நிறைவை அளிக்க வரம் வேண்டி இந்த திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

படைப்பின் காரணரே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், புனித யோசேப்பை பின்பற்றி, உமக்கு மாட்சியளிக்கும் விதத்தில் நற்செய்தி பணியாற்ற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

உழைப்பின் நாயகரே இறைவா, உழைக்கும் மக்கள் அனைவரும் நன்மை தருகின்ற நேரியத் தொழிலைச் செய்யவும், தங்கள் உழைப்பின் பயனைச் சரியான காலத்தில் துய்த்து மகிழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

வாழ்வின் ஊற்றே இறைவா, மருத்துவம், கல்வி போன்றத் துறைகளில் பணியாற்றும் அனைவரும், சேவை உள்ளத்துடன் செயல்படவும், அறநெறி முறைகேடுகளில் இருந்து விலகி வாழவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**02.05.2024 புனித அத்தனாசியுஸ்** **திருப்பலி**

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

புனித அத்தனாசியுஸ் திருவிழா திருப்பலியில் கலந்துக்கொண்டு சிறப்பிக்க வந்திருக்கும் திருஅவை நம்பிக்கையாளர்களே, உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவர் 293ம் ஆண்டு அலெக்சாண்டிரியாவில் பிறந்தார். இவர் ஞானமும், ஆழ்ந்த பக்தியும் கொண்டவர். இவர் முதலில் அலெக்சாண்டிரியாவின் ஆயர் அலெக்சாண்டரின் செயலாளராக இருந்தார். பின்பு 328ம் ஆண்டு மே 2ம் நாள் அலெக்சாண்டிரியாவின் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டார். ஆரியாஸ் என்ற நபர் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு எதிராகச் செயல்பட்டார். "கிறிஸ்து கடவுளின் மிகப்பெரிய படைப்பு மட்டுமே" என்று தப்பறைக் கொள்கையைப் பரப்பி வந்தான். கிறிஸ்துவைப் பற்றிய அவரது தெய்வீகத் தன்மையை இறுதிவரை உறுதிப்படுத்தி அதற்காக இவர் போராடி வந்தார். "ஆன்தி இன்கார்னேஷன்" என்ற புத்தகத்தின் மூலம் "நாம் மனித மாம்சத்தில் கடவுளையே வணங்குகிறோம்" என்றார். இதனால் இவரை ஐந்துமுறை நாடு கடத்தினர். பின்பு 17 ஆண்டுகள் துறவு வாழ்க்கை வாழ்ந்தார். இவர்மீது திருட்டு, கொலை குற்றம் சுமத்தப்பட்டது. ஆனாலும் இறுதிவரை இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைக்கான தனது உறுதிப்பாட்டில் அசையாமல் உறுதியுடன் இருந்து 272ம் ஆண்டு மே 2ம் நாள் இறந்தார். இந்தப் புனிதனரின் வாழ்வு நமது நம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்தெடுக்க உதவுகிறது. கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையில் நாம் நம்பிக்கைக்கொள்ள திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

நீங்கள் மிகுந்த கனித்தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சியளிக்கிறது என்று கூறிய ஆண்டவரே, உமது சீடர்களாய் திருஅவையை வழிநடத்திவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள்,

குருக்கள், துறவறத்தார் அனைவரும் நல்ல கனிதரும் வாழ்க்கை வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

பேதுருவுக்கும் மற்ற சீடர்களுக்கும் உயிர்ப்பு அனுபவம் கொடுத்து துணிவுடன் உமக்காக சாட்சிய வாழ்வு வாழச் செய்த வள்ளலே, நாங்களும் உமது உயிர்ப்பின் மகத்துவத்தை உணர்ந்து துணிவுடன் உமக்காக நற்செயல்களைச் செய்து உம்மை வெளிப்படுத்தும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

உங்களுக்கு அமைதி உரித்தாகுக, என்று அமைதியை அருளித்தவரே, இன்றைய காலக்கட்டத்தில் நிகழும் தீவிரவாதம், சாதிப்பாகுபாடு, மொழிவேற்றுமை, ஏற்றத்தாழ்வுகள் நீங்கி உலகநாடுகளில் உள்ள தலைவர்கள் அனைவரும் மக்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி நாட்டையும், மக்களையும் காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**03.05.2024 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு விழா** **திருப்பலி**

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று திருத்தூதர்களான புனித பிலிப்பு மற்றும் சின்ன யாக்கோபு இவர்களின் விழாவினை கொண்டாடுகின்றோம். திருத்தூதர் பிலிப்பு கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர். திருமணமாகி குழந்தை பெற்றடுத்தவர். இயேசு என்னை பின்பற்றி வா என அழைத்தவுடன் இயேசுவைப் பின்பற்றி தாம் கண்ட மெசியாவை தம் நண்பர் நத்தனியேலுக்கு அறிவித்து அவரையும் இயேசுவிடம் அழைத்து வந்தார். அவரும் இயேசுவின் சீடரானார். ஒரே ஒருநாள் தந்தையை எங்களுக்கு காட்டும் அதுவே போதும் என்றவர். தூய ஆவியின் வருகைக்குப் பின்பு சிரியா நாட்டில் தனது கன்னிகைகளான தனது பிள்ளைகளோடு நற்செய்தியைப் பரப்பி வந்தார். இறுதியில் பிரிஜியா நாட்டில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். **சின்ன யாக்கோபு:** இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தைச் சார்ந்தவர். அன்னை மரியாளின் உடன் சகோதரியும் கிளோபாவின் மனைவியுமான மரியாவே இவரது தாய். இவர் சகோதரர் திருத்தூதர் யூதா, ததேயு ஆவார். இவர் நீதிமான் என்று அழைக்கப்படுகிறார். எருசலேமின் முதல் ஆயர் பிறரன்பு இவரிடம் ஏராளமாய் காணப்பட்டது. ஏரோது ஆட்சியில் மிகுந்த பொறுமையை கையாண்டவர். பிற இனத்தார் தூய ஆவியைப் பெற்று கடவுளுக்கு ஏற்புடையவர்களாவது குறித்து, கடவுளிடம் திரும்பும் பிறஇனத்தாருக்கு நாம் தொல்லைக் கொடுக்கலாகாது (திப. 15:19) என எருசலேம் சங்கத்தில் முடிவு சொன்னவர். யூதர்கள் இவரை எருசலேம் கோவிலின் உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டனர். உயிர் போகாததால் கல்லால் எறிந்தும் தடியால் அடித்தும் கொன்றார்கள். அன்புக்குரியவர்களே திருத்தூதர்களைப் போல நாம் பலரை இயேசுவிடம் அழைத்து வர வேண்டும். இந்த அழைப்பைப் பெற்றுக் கொண்ட நாம் இயேசுவுக்கு சான்று பகர வேண்டும் என்ற வரம்கேட்டு இப்பலியை ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

திருஅவைக்காக: திருத்தூதர்களின் நம்பிக்கையிலும், சாட்சியத்திலும் திருஅவை பணியாளர்கள் தொடர்ந்து முன்னேறவும் இயேசுவுக்கு சான்று பகரவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நாட்டிற்காக: எம் நாட்டில் உண்மையும் நீதியும் என்றும் நிலைத்திட நல்ல தலைவர்களை எங்களுக்குத் தர அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

இங்கு செபிப்பவர்களுக்காக: நாங்கள் பலருக்கு இயேசுவை அடையாளம் காட்டுபவர்களாகவும் இயேசுவின் அனுபவம் பெற உதவுகின்றவர்களாகவும் விளங்கிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

உம்மை அறியாமலிருக்கின்ற புறஇனத்தாரும், நோயுற்று, தனிமையில், போராட்டத்தில் இருப்பவர்களுக்காகவும், சாவின் பிடியில் சிக்கியிருப்பவர்களுக்காகவும், நல்வாழ்வை நல்கும் கருவிகளாக எம்மை மாற்றிட அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**05.05.2024 பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு** **திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

திப. 10:25-26. 34-35. 44-48 1யோவா. 4: 7-10 யோவா. 15: 9-17

இறை இயேசுவின் இனிய திருக்குலமே "என் அன்பில் நிலைத்திருங்கள்" (யோவான் 15:13)

இன்று நாம் உயிர்ப்புக்கால 6ஆம் ஞாயிறை சிறப்பிக்கின்றோம். இன்றைய முதல் வாசகம் நமக்கு கூறுவது, ஒரு சாதாரண மீன்பிடிப்பவராக வலம் வந்த பேதுருவை ஆண்டவர் எத்தகைய பணிக்கு உட்படுத்துகின்றார் என்பதை கேட்கின்றோம். "கடவுள் ஆள்பார்த்து செயல்படுவதில்லை என்பதை உணர்கிறேன் என்று புனித பேதுருவே அறிவிக்கின்றார். தூய ஆவி அனைவர்மீதும், பிற இனத்தவர் உட்பட இறங்குவதையும் அவர்கள் பரவசபேச்சு பேசுவதையும் தூய ஆவியை பெற்ற அவர்கள் தண்ணீராலும் திருமுழுக்கு பெறுவதை யார் தடை செய்ய முடியும் என்று உணர்த்த, அவர் அனைவருக்கும் திருமுழுக்கு கொடுக்கின்றார். இரண்டாம் வாசகமும் நமக்கு கடவுளிடமிருந்து வரும் அன்பை, அதாவது நம் பாவங்களுக்கு கழுவாயாக தன் மகனை தந்தை அனுப்பியுள்ளார். அதன் மூலம் தந்தைக்கு நம்மீதுள்ள அன்பின் ஆழம் வெளிப்படுகிறது என்று திருத்தூதர் புனித யோவான் தன் முதலாம் திருமுகத்தில் அறிவிக்கிறார். இன்று நமக்களித்த திருப்பாடலும் பிற இனத்தவர் கண்முன்னே தன் இஸ்ரயேல் வீட்டாருக்கு வாக்களிக்கப்பட்ட அன்பையும், விடுதலையையும், உறுதிமொழியையும் தெரிவிக்கிறது.

ஆண்டவரின் உந்துதலால் நமக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியான புனித யோவான் எழுதிய நற்செய்தி வாசமும் இதையே கூறுகிறது. "என் அன்பில் நிலைத்திருங்கள்" எவ்வாறு நிலைத்திருப்பது? என் தந்தை என்மீது அன்பு கொண்டதைப் போல் நீங்களும் மற்றவர் மீதும் என் தந்தையின் கட்டளைகளை நான் கடைப்பிடிப்பதுபோல என் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடிப்பதிலுமே அன்பில் நிலைத்திருக்க வழிவகுக்கிறது என்றும் ஆண்டவர் கூறுகிறார். "நீங்கள் என்னை தேர்ந்துக்கொள்ளவில்லை நான்தான் உங்களை தேர்ந்து கொண்டேன்" "நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்கு கொடுப்பார்" என்றும் ஆண்டவர் கூறுவதை மனதில் கொண்டு மற்றவர்மீது அன்பை செலுத்தி அன்பில் நிலைத்திருக்க உறுதி கொண்டவர்களாக வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**மன்றாட்டுக்கள்**

அன்பின் திருவுருவே இறைவா, நம்மை வழிநடத்தும் திருத்தந்தை கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் அனைத்து திருநிலையினர்களும் அன்பு என்னும் பூக்களால் கோர்க்கப்பட்டு அன்பின் அடையாளங்களாக ஒரே மாலையாக வலம் வர அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்

நீதியின் நாயகனே இறைவா, அடித்தள மக்களின் நலன் கருதி பொறுப்பற்ற தலைவர்கள் பதவியில் அமராமல், தோல்வியுற செய்து நல்லாட்சியும், நல்ல திட்டங்களையும் வழங்க கூடிய பொறுப்பாளர்கள் அமைய வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

நம்மோடு அன்பில் நிலைத்திருக்கும் இறைவா, உமது திருவுளப்படி தந்தையின் கட்டளைகளை கடைபிடிக்கவும் பிறர் அன்பில் தன்னை வழங்கவும், அன்பில் நிலைத்திருக்கும் படியான சூழ்நிலை அமைய எப்போதும், வரமருளவும் ஏற்படும் இடையூறுகளை கலைந்து இறைவனில் ஒன்றித்திருக்கும் நிலையை தர உம்மை மன்றாடுகின்றோம்.

விண்ணக மண்ணக அரசரே, உமதன்பின் வெளிப்பாடு பிற இனத்தவருக்கு புரிதலை ஏற்படுத்தவும் நல்ல வாய்ப்பினை வழங்கவும் இறப்பிற்கு பின் மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கை அனைவரின் மனதிலும் ஏற்படவும், பிறமத இனத்தவருக்கும் மறுவாழ்வு உண்டு என்பதை அவர்கள் உணரவும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

**12.05.2024 ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா** **திருப்பலி**

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

தி.ப. 1: 1-11 எபே. 4: 1-13 மாற்கு 16: 15-20

இறையேசுவின் அன்பு சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருஅவை ஆண்டவருடைய விண்ணேற்றப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றது. உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாய் வாழ இன்றைய பெருவிழா நம்மை அழைத்திருக்கின்றது. எல்லா மக்களினத்தாரையும் சீடராக்கவும், தந்தை,

மகன்,தூய அவியாரின் பெயரால் திருமுழுக்குக் கொடுக்கவும் உலகமெங்கும் சென்று நற்செய்தியைப் பறைச்சாற்றவும், இயேசு தான் விண்ணேற்றம் அடைவதற்கு முன்னுர் தம் சீடர்களுக்குக் கட்டடைளப் பிறப்பிக்கிறார். "உலகமுடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று சொல்லி எல்லாரையும் உள்ளடக்கிய இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியை மேற்கொள்ள சீடர்களைப் பணிக்கிறார். இதே கடமை திருமுழுக்குப் பெற்ற நமக்கும் உண்டு என்பதை இன்றைய நாள் நமக்கு உணர்த்துகிறது. எனவே கடவுளின் பணியை முன்னெடுத்து நாம் ஆற்றும்போது தனித்துவிடப் படுவதில்லை. மாறாக உயிர்த்த ஆண்டவர் நம்முடன் என்றுமிருக்கிறார் என்பதை விண்ணேற்றம் நமக்கு உறுதிப்படுத்துகிறது.

எனவே, இயேசுவின் அறிவுறுத்தல்களை ஒன்றுபட்ட மனநிலையில் கடைப்பிடித்து அவற்றை வாழ்வாக்கும்போது நாமும் உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாக மாறலாம். இயேசுவின் விண்ணேற்பு நமக்கு உணர்த்துவது "தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் உயர்த்தப் பெறுவர்" என்பதாகும். இயேசு தந்தையின் விருப்பத்திற்கு தன்னையே தாழ்த்திக்கொண்டார். அவர் சித்தத்திற்கு தன்னையே அர்ப்பணிக்கிறார். கடவுள் எக்காலத்திற்கும் அவரை உயர்த்தியிருக்கிறார். இயேசுவின் விண்ணேற்பை மூன்று நிலைகளில் புரிந்துக்கொள்வது நல்லது. 1. மண்ணை மனம் ஏற்றல்: 2014ம் ஆண்டில் புனித வியாழனன்று திருத்தந்தை பிரான்சிஸ் நிறைவேற்றியத் திருத்தைல புதுப்பித்தல் திருப்பலி மறையுரையில் "உங்கள் ஆடுகளின் வாசனையை முகர்ந்து பணியாற்ற மறக்கவேண்டாம்" என திருப்பணிநிலையினருக்கு அறிவுறுத்தினார். இயேசுவின் விண்ணேற்பு என்பது மக்களை மறந்து கடந்து சென்றதல்ல, மண்ணக மாந்தரின் மனங்களுள் குடிபுகல்.

2. நற்செய்தியாதல்: இயேசு நமக்குள் குடியேறியதால் அவரது நற்செய்திப் பணி நம் வழியாகத் தொடர வேண்டும். நம் வாழ்வின் அணுகுமுறைகள், திட்டங்கள், செயல்பாடுகள் ஒவ்வொன்றினாலும் நற்செய்தி அறிவிப்பின் பரிமாணங்களாய் மிளிர்தல். 3. அடையாளமாதல்: நம் இலக்குகளும், கரிசனைகளும் முதன்மைகளும் இயேசுவின் கனவை நனவாக்குவதாய் இருந்தால் நாமே உடன்வாழும் இயேசுவின் உயிருள்ள அடையாளங்கள். இப்பண்புகளையே இன்று நாம் நினைவுகூரும் நம் ஒவ்வொரு அன்னையரும் வாழ்வால் செயல்படுத்துகின்றனர். எனவே, இயேசுவின் விண்ணேற்பில் நம் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வோம் என உறுதியளித்து பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

தூய ஆவியாம் துணையாளராய் அனுப்பி திருஅவையை வழிநடத்தும் இறைவா, உம் திருஅவையின் துணையால் அனைவரையும் இறையுறவில் வழிநடத்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

வாழ்வளிக்கும் இறைவா, விலைவாசி உயர்வு, வன்முறைகள், உணவு மற்றும் இருப்பிடம் இல்லாமை என பல்வேறு துன்பங்களுக்கு மக்கள் உள்ளாகி, துன்பப்படும் நிலை உயர்ந்து வருகிறது. அம்மக்களுக்குத் துன்பத்திலிருந்து விடுதலைக்கொடுக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

அன்பு செலுத்துங்கள் என்று கூறிய இறைவா, நாங்கள் குடும்பங்களின்மீதும், சமுதாயத்தின்மீதும், நலிவுற்ற, கைவிடப்பட்ட, ஆதரவற்ற மக்கள்மீதும் கருணைக்காட்டி அவர்களை அன்பு செய்து வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

கருணையின் இறைவா, நோயாளிகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் நல்ல உடல்உள்ள நலமும், பாதுகாப்பும், உடனிருப்பும் தந்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**13.05.2024 பாத்திமா நகர் புனித கன்னிமரியா திருப்பலி**

**முன்னுரை** திரு. T. சாம்சன்

அன்னையின் அன்பு இறைச்சமூகமே, இன்று நாம் பாத்திமா அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். தூய பாத்திமா அன்னை என்ற பெயர் போர்ச்சுக்கல் நாட்டில் பாத்திமா நகரில் 1917 மே மாதம் 13 முதல் ஜெசிந்தா, மார்த்தோ, பிரான்சிஸ்கோ மார்த்தோ என்ற மூன்று சிறாருக்கு அன்னை மரியா அளித்த காட்சியின் அடிப்படையில் அவருக்கு வழங்கப்படுகின்ற பெயராகும். இந்த உலகில் பல்வேறு இடங்களில் மரியன்னை அளித்த காட்சிகளில் சிறப்பு வாய்ந்ததாக பாத்திமா நகர் காட்சியும் விளங்குகிறது. இரண்டாம் உலகப்போர், ரஷ்ய நாட்டின் மனமாற்றம் ஆகியவைப்பற்றி பாத்திமா அன்னை வழங்கிய முன்னறிவிப்புகள் அப்படியே நிகழ்ந்ததால் பாத்திமா காட்சி மிகவும்

பிரபலமடைந்தது. அன்னையின் திருவிழாவானது மே மாதம் 13ம் தேதி கொண்டாடப்படுகிறது. 1917ம் ஆண்டு மே 13ம் தேதியன்று மூன்று சிறார்களுக்கு நற்கருணையை கையில் ஏந்தி இருந்தார். அப்போது அவரது கையில் இரசக்கிண்ணமும் அதன்மேல் நற்கருணை அப்பமும் அந்தரத்தில் மிதந்தவாறு காட்சியளித்தது. வானதூதர் குழந்தைகளிடம் இயேசுவும் அன்னை மரியாளும் உங்கள் மன்றாட்டுக்கு செவிகொடுக்கக் காத்திருக்கிறார்கள் அவர்களிடம் நீங்கள் இவ்வாறு வேண்டுங்கள் "என் கடவுளே நான் உம்மை விசுவசிக்கிறேன், நான் உம்மை ஆராதிக்கிறேன். நான் உம்மை நம்புகிறேன், நேசிக்கிறேன், உம்மை நம்பாதவர்கள், விசுவசிக்காதவர்கள், நேசிக்காதவர்களுக்காகவும் உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்று வேண்டுங்கள்" என்றார்.

அன்னையின் மூன்று இரகசியங்கள்: 1. பாத்திமாவில் காட்சியளித்தபோது மக்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பவில்லையென்றால் மீண்டும் உலகப்போர் தோன்றும் என்றும், இரவு வானில் தோன்றும் ஓர் ஒளியே அதற்கு அடையாளம். அந்த ஒளி 1938 ஜனவரி 25 அன்று வானில் தோன்றி பூமியின் வடஅரைக்கோளம் முழுவதும் ஒளிர்ந்தது. இரண்டாம் உலகப்போரும் ஏற்பட்டது. 2. ரஷ்யா மனந்திரும்ப கிறிஸ்தவர்கள் அனைவரும் செபிக்க வேண்டுமென்று கூறினார். 3. இறுதிகாலத்தில் மக்கள் கடவுளை மறந்து தீய வழியில் நடப்பார்கள். தீவிரவாதம், வன்முறை, அதிகரிக்கும், கத்தோலிக்க திருஅவையும், திருத்தந்தையும் மிகவும் துன்புறுவர் என்று கூறினார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மற்றும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஆசீர்வதித்து பாதுகாத்து வழிநடத்தவும், தாங்கள் மேற்கொள்கின்ற பணியின்போது ஏற்படுகின்ற தடைகளை தகர்த்து வெற்றியோடு செயல்பட வேண்டிய ஆற்றலையும், சக்தியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நல்லாயனாம் எம் இறைவா, புதிதாக வரவிருக்கின்ற தலைவர்கள், நாட்டிற்காகவும் மக்களின் நலனுக்காகவுமே தங்களின் பணியினை செயல்படுத்தக் கூடிய நல்ல எண்ணத்தையும், நோக்கத்தையும் மனதில் கொண்டு எவ்வித பாரபட்சமுமின்றி செயல்பட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, இளையோரை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். தங்களின் திறமைக்கேற்ற வேலைவாய்ப்பும், திருமணத்திற்கான வாழ்க்கைத் துணையுமின்றி தவிப்போர், பணப்பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனையின் காரணமாக மனமுடைந்து வாழும் உம் பிள்ளைகளை கண்ணோக்கி, அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.05.2024 புனித மத்தியா திருத்தூதர் விழா — திருப்பலி

**முன்னுரை** — திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, "மத்தியா என்பதற்கு யாவேவின் கொடை" என்பது பொருள். இறைவனின் அருட்கொடையைப் பெற்றவர்கள் அனைவரும் அனைத்து நலன்களையும் பெற்று ஆனந்த வாழ்வு வாழ்ந்து மரித்தவர்கள் இல்லை. இறைவனின் அன்புக்காக தன் இன்னுயிரையும் மனம் உவந்து சாட்சியாக அளித்து இறையரசின் விழுமியங்களை மண்ணில் பதித்துச் சென்றவர்களே இங்கு அதிகம். இன்று நாம் நினைவுக் கூறும் புனிதர் திருத்தூதர் புனித மத்தியாஸ். இவர் இயேசுவின் 12 திருத்தூதர்களில் ஒருவராக வாழ்ந்து இரத்த சாட்சியாக மரித்தார். இயேசுவின் விண்ணேற்றத்திற்கு பிறகு திருத்தூதர்கள் ஒன்று கூடி யூதாஸ் இஸ்காரியோத்துவினால் திருத்தூதர்கள் அணியில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முயன்றார்கள். புதிய திருத்தூதர் ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் திருத்தூதர் தொடக்கம் முதல் இயேசுவோடு இருந்தவராகவும் இயேசுவின் திருமுழுக்கு முதல் அவரின் விண்ணேற்றத்தை பார்த்தவராகவும் அவரை பற்றி நன்கு தெரிந்தவராகவும் இருக்க வேண்டும் என்று அனைவரும் ஒரு மனதாக ஆண்டவரை நோக்கி செபித்தனர். பிறகு அவர்கள் கூட்டத்தில் இருந்து "பர்சபா" என்பவரையும் "மத்தியா" என்னும் இருவரை தேர்ந்தெடுத்தனர். சீடர்கள் இருவர் பெயரையும் சீட்டு எழுதி போட்டு குலுக்கினார்கள் சீட்டு மத்தியாவின் பெயருக்கு விழுந்து திருத்தூதர்கள் ஆண்டவரின் பெயரால் மத்தியாவை தங்களோடு இணைத்துக் கொண்டனர். புனித மத்தியாவைப் பற்றிய குறிப்பு நற்செய்தி நூல்களில் இல்லை. ஆனால் இவர் இயேசுவோடு அவருடைய விண்ணேற்பு வரை

இருந்ததாக திருத்தூதர் பணிகள் பதிவு செய்கின்றது. சில இடங்களில் இவருடைய பெயர் "பர்னபா" என்றும் உள்ளது.

புனித மத்தியாவின் பணி மற்றும் இறப்பு பற்றி பல்வேறு விதமாக கூறப்படுகின்றது. ஒரு குறிப்பின் படி இவர் கப்பதோகி பகுதியில் பணியாற்றிவிட்டு இறந்தார் என்றும் மற்றொன்றில் இவர் மனித இறைச்சி சாப்பிடும் கொடியவர்களுக்கு நற்செய்தி அறிவித்து கல்லால் எறியப்பட்டு இறந்தார் என்றும், வேறு ஒரு குறிப்பில் இவர் யூதேயாவிலும் சுற்றுப் புறங்களிலும் நற்செய்தி பணியின்போது வாளால் வெட்டி கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. புனித மத்தியா வாழ்க்கை நமக்கு உணர்த்துவது பணியாளர் நிலையில் இருந்த இவர் நண்பர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றார். சீடர் நிலையில் இருந்தவர் திருத்தூதர் நிலைக்க மேன்மைப்படுத்தப்படுகிறார். எனவே இறைவனின் திருவுளச் சீட்டு நம் பெயருக்கு எப்பொழுது விழும் என்று தெரியாது. அவ்வாறு விழும் சீட்டை பெற நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள தேவையான வரத்தைக் கேட்போம். இயேசுவின் சீடர்களாய் வாழ்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்**

என் அன்பில் நிலைத்திருங்கள் என்றுரைத்த என் இறைவா, உம் அன்பை நாங்கள் சுவைக்கவும் அதன்படி வாழவும் எங்களை வழிநடத்த உம்மால் தேர்ந்தடுக்கப்பட்ட எம் ஆயர்கள் குருக்கள் துறவரத்தாரை நீர் எவ்வாறு 12 திருத்தூதர்களை தேர்ந்தெடுத்து இறைதிட்டத்தை நிறைவேற்ற பயன்படுத்தினீரோ அதைப் போன்றே உலக நாட்டங்களை விடுத்து உம் பணியை உலகெங்கும் செய்திட தேவையான உள்ள உறுதியையும் இறைபயமும் ஞானமும் பெற்று இறைப்பாதையில் நடந்திட வேண்டிய வரங்களை அளித்திட உம்மை மன்றாடுகின்றோம்.

அன்பு இறைவா, உம் வருகை அண்மையில் இருக்கின்றது என்பதற்கு சான்றாக இப்பொழுது உலகெங்கும் நடந்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு செயல்களையும் நீர் அறிவீர் அந்த உலகத் துன்பங்கள், வேதனைகள், பாகுபாடுகள் எம்நாட்டில் உள்ள யாரையும் தாக்காத வண்ணம் நாட்டை நல்லாட்சி புரியும் ஒரு தலைமைத்துவ சமத்துவ ஆட்சி இந்திய நாட்டில் அமைந்திட, ஆட்சியாளர் சர்வாதிகாரம் பெற்றவர் அல்ல, அமைதியை ஏற்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற உணர்வுக் கொண்ட ஒரு பிரதம மந்திரி கிடைத்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

இயற்கையின் ஊற்றே எம் இறைவா, இன்று மாறிவரும் இயற்கை சூழ்நிலைகளினால் வெப்பம் அதிகரித்து நீர்நிலைகள் வற்றிப் போய், தண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம் பெருகிவருகின்றது. வெப்பச் சலனத்தினால் கொடிய வியாதிகள், உடல் உடல் துன்பங்கள் மனச் சோர்வினால் வாடிவரும் மக்களுக்கு ஏற்றக்காலத்தில் நல்ல மழையைத்தந்து கொடிய ஆக்கிணைகளிலிருந்து மக்களை காத்தருள உம்மை மன்றாடுகின்றோம்.

ஞானத்தின் ஊற்றே எம் இறவைா, எம் மாணவர்கள் தேர்வின் முடிவினை எதிர் நோக்கி உள்ளனர் அவர்கள் எதிர்ப்பார்க்கும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்வில் வெற்றிபெறவும் எம் மாணவர்கள் எதிர்பார்க்கும் உயர்க்கல்விக்கான பாடப்பிரிவுக் கிடைத்திடவும் நல்லக் கல்லூரிகளில் இடம் கிடைத்திடவும், கல்லூரியில் இறுதி ஆண்டினை முடித்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைத்திடவும் எம் பிள்ளைகள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையினை அடைய ஆசிர்அளித்து காத்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

**19.05.2024 பெந்தக்கோஸ்து ஞாயிறு பெருவிழா** **திருப்பலி**

**முன்னுரை** திரு. விக்டர்

தி.ப. 2:1-11 கலா. 5: 16-25 யோவா. 15: 26-27, 16:12-15

இயேசு மரித்து உயிர்த்தபின் வருகிற ஐம்பதாவது நாளை "பரிசுத்த ஆவியின் விழா" என்று கொண்டாடி மகிழ்கின்றோம். இந்த விழாவை "பெந்தகோஸ்து" விழா என்றும் சொல்லிக் கொண்டாடுவது உண்டு. பெந்தகோஸ்து என்றால் 50வது நாள் என்பது பொருள். பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆண்டவராகிய கடவுள் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்கள் கொண்டாடும்படி ஏற்படுத்தப்பட்ட விழாதான் இந்த பெந்தகோஸ்தே விழா.

இஸ்ரயேல் மக்கள் தங்கள் வயல்களில் கோதுமையை அறுத்து முடித்தபிறகு ஏழுவாரங்களைக் கணக்கிட வேண்டும். ஏழாம் நாள் ஓய்வு நாளுக்கு மறுநாளான ஐம்பதாவது நாளில் ஆண்டவருக்குப் புதுப்படையலைச் செலுத்துங்கள். அந்நாளை திருப்பேரவை நாளாக அறிவியுங்கள் (லேவி. 23:15-22).

அறுவடையின் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்த இந்த விழாவானது பழைய ஏற்பாட்டின் பாஸ்கா விழாவிற்குப் பிறகு வருகிற 50வது நாளில் கொண்டாடப்பட்டு வந்து, புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு பாஸ்கா விழாவன்றுதான் சிலுவையில் மரித்தார். அவர் மரித்த 50வது நாளில் பெந்தகோஸ்தே விழா வழக்கம்போலவே யூதர்களால் கொண்டாடப்பட்டது. ஆனால் அன்றுதான் பரிசுத்த ஆவியார் அப்போஸ்தலர் மேலும் சீடர்கள்மேலும் பொழியப்பட்டார். எனவே இந்த பரிசுத்த ஆவியின் விழாவை "பெந்தகோஸ்தே" விழா என்று சொல்லி நாம் இன்று கொண்டாடி வருகின்றோம். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு மோசே மூலமாக பத்துக் கட்டளைகள் கொடுத்தார். அன்று அதை ஏற்காக 3000பேர் ஒரே நாளில் மடிந்துபோயினர் (விப.32:26).

புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் வருகை மூலமாக திருச்சபைக்கு புது வாழ்வு வழங்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட 3000பேர் ஒரே நாளில் புதுவாழ்வு பெற்றனர் (இச.2:41). திருஅவையின் துவக்கத்திலிருந்தே இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகின் இறுதிவரை நம்மோடு தங்கியிருக்கவும், நம்மை வழிநடத்தவும், வழங்கப்பட்டவர்தான் இந்த பரிசுத்த ஆவியானவர். அவரது வழிகாட்டுதலில் நடக்கும்போது வாழ்வு பெறுகிறோம், புத்துணர்வு அடைகிறோம், விவிலிய விளக்கங்களைப் பெறுகிறோம், பாவத்தை வெறுக்கும் மனதையுடையவர்களாக மாறுகிறோம், இயேசுவின் சாட்சிகளாய் மாறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் கலந்துகொண்டு இறையருளை வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

தூய ஆவியே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரையும் ஆளுமை செய்யும். ஞானத்தின் ஆவியே இவர்களுக்கு உமது ஞானத்தை வழங்கி நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் இவர்களைத் திறம்ப வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நிறை உண்மையை நோக்கி வழிநடத்தும் ஆவியே இறைவா, எமது தாய் திருநாட்டை ஆளும் தலைவர்களையும், அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் ஆசீர்வதியும். அதிகாரங்கள், பதவிகள் இவற்றை நீர்தான் வழங்கியுள்ளீர் என்பதை அவர்களுக்கு உணர்த்தி வளமான, செழுமையான, சமாதான பாதையில் மக்களை வழிநடத்திச்செல்ல அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், தாராள மனதையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

புத்துணர்ச்சியூட்டும் ஆவியே இறைவா, ஆண்டவர் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதற்குத் தடையாக இருக்கும் எமது பெருமைகள், மன்னிக்கும் மனமின்மை, தாழ்வு மனப்பான்மை, கீழ்ப்படியாமை, பொறாமை, பணஆசை, கோபம், வைராக்கியம், காமஇச்சை ஆகியவற்றை விட்டுவிடுவதற்கு தேவையான ஆற்றலையும், சக்தியையும் தந்து இயேசுவின் உண்மையான சாட்சியாக வாழ்வதற்கு உதவி செய்து வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வரமருளும் வள்ளலே எம் இறைவா, இங்கு குழுமியிருக்கும் மக்களில் சிலர் உடல் வியாதியோடும், மனவேதனையோடும் வந்திருப்போருக்கு நற்சுகத்தையும், துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதலையும், பெலவீன அடிமைத்தனத்தில் வந்திருப்போருக்கு விடுதலையும், கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு நல்ல ஞானத்தையும் வழங்கி அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**20.05.2024 மரியா திருஅவையின் அன்னை திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இன்று கன்னியும் அன்னையுமான புனித மரியாவை திருஅவையின் தாய் எனும் விழாவினை நாம் கொண்டாடி மகிழ இணைந்துள்ளோம். திருஅவைக்கு கன்னியும் அன்னையுமான மரியாள்தான் தாய் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். இப்படி அழைப்பதற்கு வழிவழியாக வந்த பாரம்பரியமும் மரபுமே காரணமாகும். முதன் முதலில் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிப்பு புதிய ஏற்பாட்டில் இறை இயேசுவிற்காக தேர்ந்தது முதல் பெற்றெடுத்ததுவரை அவரோடு அல்லும் பகலும் இணைந்திருந்தது, சிலுவையடியில் நின்றபோது புனித யோவானிடம் மனுகுலத்திற்காக ஒப்படைத்தது, தொடக்க திருஅவையில் திருத்தூதர்களோடு மேல் மாடியில் இருந்தது, இப்படியாக மரியன்னை பயணித்தது

நம்பிக்கையாளர்கள் அனைவரின் உள்ளத்தில் இந்த அனுபவம் மிக ஆழமாக வேரூன்றி பதிந்தது. இதை நான்காம் நூற்றாண்டிலேயே மிலனில் புனித அம்புரோஸ் அவர்கள் தனது மடலில் எழுதி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பல ஆயர்கள் திருத்தந்தையர்கள் (பெனடிக்ட் லியோ) போன்றோர் தங்களது "மேட்டர்" மடல்களில் வலியுறுத்தி திருஅவையின் தாய், திருத்தூதர்களின் ஆசிரியர், மற்றும் அரசியாகவும் கன்னிமரி அழைக்கப்படுகிறார் என எழுதப்பட்டுள்ளது---- வழங்கப்பட்ட இப்பட்டமானது மரியியலின் ஆராய்ச்சிக்குப்பின் ஏற்கப்பட்டு அதன்தாக்கம் தொடர்ந்து வருவதையறிந்த திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மூன்றாம் அமர்வில் மிலனில் புனித அம்புரோஸ் அவர்களின் கருத்தை ஒட்டிய விண்ணுலகத் தாய், மீட்கப்பட்ட ஆன்மாக்களின் தெய்வீகப் பிறப்பு, புதிய ஏவாளாக அனைத்து வளர்ச்சிகளுக்கும் அன்னை ஒத்துழைக்கிறார். ஆகவே அனைத்து ஆன்மாக்களின் கிறித்தவ புனித அன்னையாகவும் உறுதிப்படுத்தி அறிவிக்கிறோம் என தனது கருத்தைப் பதிவு செய்தார்.

இப்போதுள்ள திருத்தந்தையும் இதனைக் கொண்டாட நாட்காட்டியிலும் குறித்தார். இரண்டாம் வத்திக்கான சங்கத்தின் மன்றக் கூடலின்போது அனைத்துலக பல்கலைக்கழக மாணவர் மன்றத்தின் வருடாந்திர ஒன்றுகூடல் நடைபெற்றது. அப்போது புனித ஜோஸ் மரியாவின் வேண்டுதலால் பிறந்த மாணவர் ஒருவர் மனம் உந்தப்பட்டு கிறித்தவர்களின் இதயமாக திகழும் புனித பீட்டர் சதுக்கத்தில் அத்துனை அடையாளங்களை பிரதிபலிக்கும் சுரூபங்கள் உள்ளன.

அன்னையினது மட்டும் இல்லை என்பதனை சுட்டிக்காட்டினார். அதனை திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஏற்று முறைப்படி அத்தனை ஆவணங்களை சரிபார்த்து அனுமதி பெற்று எத்திசையிலிருந்து பார்த்தாலும் தெரியும்படி அமைக்கப்பட்டது. இப்படியாக கன்னியும் அன்னையுமான அன்னைமரி ஒவ்வொரு கிறித்தவருடைய தனிப்பட்ட உறவை வளர்த்துக்கொண்டு அந்த உறவின்மீது அதிக கவனம் செலுத்தப்படுவதால் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி தேவாலயத்தின் தாய் என தொடர்ந்து அழைக்கப்பட்டு அதனை விழாவாகவும் கொண்டாட அறிவிக்கப்பட்டதை நாமும் அவற்றில் பங்கேற்று கொண்டாடி மகிழ்வோம், அன்னையின் அருளைப்பெற இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, எமது தாய் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார், நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் அனைவரும் என்றும் அன்னையின் அரவணைப்பில் அருள்பரிந்துரையில் நிலைத்து நின்று தொடர்பணியாற்றும் வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

தரணிக்கே உமதுயிரை கையளித்தவரே, உலக மக்கள் அனைவரும் அன்னையின் அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கவும், ஆபத்து வேளைகளில் உடனிருந்து பாதுகாக்கவும், உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், பக்தியும் உள்ளவர்களாகவும், தங்களை முழுமையாக உம்மிடம் அர்ப்பணித்து வாழும் நல்லுள்ளம் கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

உம் அன்னையை எங்களுக்கு கொடையாக அளித்தவரே, இம்மாதம் முழுவதும் அன்னையின் விழாவைச் சிறப்பிக்கின்ற நாளில் பள்ளி, கல்லூரிகளில் பிள்ளைகளின் மேற்படிப்பிற்காக தயாரிக்கும் பெற்றோர்களின் சுமைகளையெல்லாம் சுகங்களாக மாற்றியருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

அன்பும் இரக்கமும் நிறைந்தவரே, நாட்டையாளும் தலைவர்கள் அனைவரும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படவும், தன்னலம் கருதாமல் மக்களின் நன்மைக்காகவே தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து, நாட்டையும் மக்களையும் பாதுகாத்திட வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 21.05.2024 புனித கிறிஸ்டோபர் மகல்லானஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் ஆலாய்சியஸ்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று திருஅவையானது புனித கிறிஸ்டோபர் மெகலன்ஸ் என்பவருடைய திருவிழாவைக் கொண்டாடுகிறது. இவர் மெக்சிகோவின் குவாடலஜாரா மாகாணத்தில் ஏழை விவசாயிகளான பக்தியுள்ள பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். முதலில் ஆடு,

மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் மேய்ப்பராக அழைத்தார். இறை அழைப்பை ஏற்று 30 வயதில் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தச்சுத் தொழில் கூடம் ஒன்றைத் தொடங்கினார். 1920களில் மெக்சிகோவில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை அழிக்க ஆட்சியாளர்கள் சட்டங்களை இயற்றினார். இவர் அரசாங்கத்திற்கு எதிராக கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களை ஊக்கப்படுத்த ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். அனாதை இல்லங்களை உருவாக்கி ஏழைகளுக்கு உதவி செய்தார். ஒரு அணையைக் கட்டி பாசனத்திற்கு உதவினார். 1927, மே 25ம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டார். இறுக்கும்போது "பிளவுப்பட்ட மெக்சிகோ மக்களுக்கு என் இரத்தம் அமைதியைக் கொண்டுவரும்" என்று கடவுளிடம் மன்றாடினார். திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் 2000ஆம் ஆண்டில் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

என்னிடம் நம்பிக்கைக்கொள்பவர் இறப்பினும் வாழ்வர் என்று கூறிய ஆண்டவரே, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றுமுள்ள அனைத்து நல்லுங்களையும் உமது அருட்கரத்தால் ஆசீர்வதித்து நல்வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வறண்ட தரையில் நீரோடைகள் ஓடச்செய்வேன் என்றவரே, எம் நாட்டில் நிலவிவரும் வறட்சி, மழை இல்லாமை, விவசாயப் பாதிப்பு, வெயிலின் தாக்கம் இவற்றிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காக்கவேண்டுமென்றும், நல்லதொரு மழையினைத் தந்து விவசாயம் செழிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்பின் ஆண்டவரே, நோய்களைப்போக்கும் மருத்துவரே எம் இறைவா, நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும், தனிமையிலும் வாடுவோரை உமது கருணையினால் குணமளித்து வாழ்வில் மகிழ்ச்சியடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**22.05.2024 காசியா நகர் புனித ரீத்தா** **திருப்பலி**

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

புனிதர்களின் வரிசையில் அற்புதமான புனிதையாகத் திகழ்ந்தவர்தான் புனித ரீத்தா. இவர் குடும்பங்களுக்கும், துறவறத்தாருக்கும் பாதுகாவலியாகத் திகழ்கின்றார். இத்தாலி நாட்டில் கால்நடைகளை வைத்து வாழ்க்கை நடத்திவந்த ஒரு ஏழைத் தம்பதியருக்கு ஒரே மகளாகப் பிறந்தவர். குழந்தையில்லாமல் இறைவனிடம் இவர் பெற்றோர் மன்றாடியதன் காரணமாக இறைவனால் வழங்கப்பட்ட அற்புத குழந்தைதான் புனித ரீத்தா. இவர் பிறந்த அன்று தேனீக்கள் கூட்டம் ரீங்காரத்துடன் குழந்தையிருந்த அறைக்குள் புகுந்தன. ஆனால் அவைகள் யாருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படுத்தவில்லை. இந்நிகழ்வானது இன்றுவரை ஆண்டுதோறும் புனித வாரம் முழுவதும், ரீத்தாவின் திருநாளின்போது இச்சம்பவம் நிகழ்ந்துக்கொண்டிருக்கிறது.

ரீத்தாவின் தாயார், அவருக்கு இறைவனையும், அவருடைய பாடுகள், மற்றும் மாதாவின் பக்தி முக்கியமாக செபமாலை பக்தியைப் பற்றியும் அதிகமாக அறியச் செய்ததன் காரணமாக ரீத்தா இறைவனை முழுமையாக அன்பு செய்து, அவரைப் பற்றிக்கொண்டார். இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதிலும், திருஇதயத்தின்மீது பக்தியும் கொண்டிருந்தார். இவர் துறவற வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள எண்ணியிருந்தார், ஆனால் பெற்றோருக்குக் கீழ்ப்படிய எண்ணிய ரீத்தா திருமண வாழ்வை ஏற்றுக்கொண்டார். பெரிய பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பவுலோ என்பவருக்கு மணமுடித்து வைத்தனர். இவர் மிகவும் முரட்டுத்தனமான குணமும், கோபமும், அரக்கத்தனமும் கொண்டவர். அவ்வப்போது தன் மனைவியிடம் தன் கொடூர குணங்களைக் காட்டினார்.

குடும்ப வாழ்வில் தன்னை எதிர்கொண்ட சூறாவளியைக் கண்டு மனம் சோர்ந்து போகாமல், அது இறைவன் தனக்களித்த பரிசென எண்ணி பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார். கணவரின் கொடுமைகளுக்கு நடுவில் ஜான், பவுல் என்ற இரு புதல்வர்கள் பிறந்தனர். பிள்ளைகளும் தந்தையைப் போன்றே முரட்டுக்குணம் கொண்டவர்களாக இருந்தனர். ரீத்தாவின் இடைவிடாத செபத்தினால் கணவர் மனமாற்றமடைந்தார். ஆனால் அவரின் பகைவர்களால் குத்திக் கொல்லப்பட்டார். தந்தையைக் கொன்றவரை பழிவாங்க வேண்டுமென்று அவரது பிள்ளைகள் இருவரும் தனது தந்தையின் குடும்பத்தோடு இணைந்து பல வழிகளில் குத்துச்சண்டை, வாள்பயிற்சி போன்ற பல

பயிற்சிகளைக் கற்றனர். இதையறிந்த ரீத்தா மனமுடைந்து தன் பிள்ளைகளிடம் தந்தையைக் கொன்றவரை மன்னிக்கும்படி அறிவுரை கூறினார்.

ஆனால் அவர்கள் பழிவாங்குவதிலேயே குறியாய் இருந்தனர். எனவே ரீத்தா இறைவனிடம் "பாவம் செய்து இறைவனின் கோபத்திற்குள்ளாவதைவிட இறைவன் இவர்களை அழைத்துக்கொண்டாள்" நல்லதென்று இறைவனிடம் செபித்தார். அவ்வாறே பிள்ளைகளும் நோயினால் அடுத்தடுத்து இருவரும் இறந்தனர். கணவரின் மரணம், பிள்ளைகளின் மரணம் இவைகளால் தனித்துவிடப்பட்ட ரீத்தா மனம் சோர்ந்து போகாமல் இறைவனின் சித்தம் நிறைவேற அதிக செப, தபத்தில் ஈடுபட்டார். துறவற சபையில் சேர புனித அகுஸ்தினார் சபையில் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி இருமுறை கன்னியர்களிடம் தயவுடன் கேட்டார். ஆனால் கன்னியர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். ஒருநாள் தான் உருக்கமாக செபித்துக்கொண்டிருந்தபோது புனித அருளப்பர், புனித அகுஸ்தினார், புனித நிக்கோலாஸ் மூவரும் இரவில் பூட்டியிருந்த மடத்திற்குள் சென்று மடத்தின் சிற்றாலயத்தில் விட்டுச் சென்றனர். பூட்டிய கதவிற்குள் செபித்துக் கொண்டிருந்த ரீத்தாவைக்கண்டு நடந்ததை அறிந்து அவர்கள் ரீத்தாவை தங்களுடைய துறவற சபையில் ஏற்றுக்கொண்டனர்.

இயேசுவின் பாடுகளோடு தன்னை இணைத்துக்கொள்ள அவருக்காக துன்பங்களை அனுபவிக்க அழுது செபித்ததன் பலனாக இயேசுவின்முள் முடியிலிருந்த ஒரு முள்ளை தன்னுடைய நெற்றியில் பெற்றுக்கொண்டார். தன்னுடைய செப, தப வலிமையால் உயிரோடிருக்கும்போதே அநேக புதுமைகளை செய்தார். அவரது புகழ் எங்கும் பரவியது, பலர் குணமடைந்தனர். 1457ம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி தனது 77வது வயதில் தனது தூய ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைத்தார். திருத்தந்தை 13ம் லியோ 1900ம் ஆண்டு அவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். விழாவில் புனித ரீத்தாவைப்பற்றி குறிப்பிடும்போது, "முடியாததையும் முடித்துக்காட்ட வல்லவர்" புனித ரீத்தா என்று பெயர் சூட்டினார். இறைவன்மீதும், தேவ அன்னையின்மீதும் அன்பு கொண்டவர். இறைவனும் புனிதையின் அன்பின் மிகுதியால் தனது முள்முடிக் காயத்தை பரிசாகக் கொடுத்தார். புனிதர்களை பாதுகாவலாகக் கொண்டு வாழ்க்கையை இறைவழியில் அமைத்துக்கொள்ள புனித ரீத்தா அன்னை வழியாக இன்றைய திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் வல்லமையாலும், தூய ஆவியாரின் அருள்வரங்களாலும் நிரப்பப்பட்டு தங்களின் பணிவாழ்வில் ஏற்படும் அனைத்து இன்னல்களையும் எதிர்கொண்டு வாழும் ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

தூய்மையே உருவான இறைவா, நாங்கள் நல்லவற்றை விரும்பும் ஆன்மீக செயல்பாடுகளில் அக்கறைக் கொள்ளவும், இறைவனுக்கும் திருஅவைக்கும் சான்று பகரக்கூடியவர்களாக வாழவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கமே உருவான இறைவா, எங்களின் வாழ்வில் வரும் சோதனை, துன்பம், ஏமாற்றங்கள், நெருக்கடிகள், தோல்விகள் இவற்றையெல்லாம் செபத்தினால் மட்டுமே வெற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை எங்களில் வளர்த்துக்கொண்டு உம்மை பற்றிக்கொள்ளும் ஆழ்ந்த விசுவாசத்தை எங்களில் வளர்த்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**26.05.2024 தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா** **திருப்பலி**

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இச. 4: 32-34, 39-40 உரோ. 8: 14-17 மத். 28: 16-20

மூவொரு இறைவனில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட இறைமக்களே, இன்று மூவொரு இறைவனின் பெருவிழாவைக் கொண்டாட ஒன்றுக்கூடியிருக்கின்றோம். "ஒன்றிப்பென்னும் ஓடத்தில் பயணிப்போம், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று" (தொ.நூ. 2: 18) என மனிதகுலத்திற்கு சூத்திரம் வகுத்தக் கடவுள் தாமும் தனித்துச் செயல்பட விரும்பவில்லை. எனவேதான் "தந்தை, மகன், தூய அவியார்" என மூவொரும் ஒரே கடவுளாய் ஒன்றித்து உலகைப் படைத்து இயக்குகின்றார். மூவொரு கடவுளின் ஒன்றித்த உணர்வு ஒட்டுமொத்த உயிர்களின் உதிரத்திலும் நதியாகப் பாய வேண்டுமென்பதே அவர்களது ஆவல். எனவேதான் தன்னுடைய பாடுகளை எதிர்கொள்வதற்கு

முன்னர் இயேசு கெத்சமனியில் மண்டியிட்டு "தூய தந்தையே, நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி (யோவான் 17: 11) மன்றாடினார். அந்த மன்றாட்டுடன் அவர் நின்றுவிடவில்லை. "உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடனே" மத் 28:30 என்ற உறுதியையும் வழங்கினார். உடன் வாழும் மாந்தரோடும், ஏனைய உயிர்களோடும், இயற்கையோடும் ஒன்றிக்காமல் கடவுளோடு மட்டும் ஒன்றித்து வாழ்கிறேன் எனக்கூறும் மனநிலை மூவொரு கடவுளுக்கு எதிர் சிந்தனை.

ஒன்றிப்பெனும் ஓடத்தில் பயணித்தால் செல்லும் இடமெங்கும் விண்ணகம் காணலாம். மூவொரு இறைவனைப்பற்றிய பல விளக்கங்கள் இருந்தாலும் வார்த்தைகளால் வரையறுத்துவிட முடியாத ஒரு மறைபொருள். ஒரு மனிதனிடத்தில் உடல், ஆவி, ஆன்மா ஆகிய மூன்றும் இணைந்ததுதான் ஒரு முழு மனிதன். ஆனால் அதனதன் செயல்பாடுகள் வெவ்வேறாக உள்ளது. அப்படியே "கடவுள் ஒருவரே, அவரின் செயல்பாடுகள் வெவ்வேறாக இருக்கின்றன. ஒவ்வொரு கத்தோலிக்கர்களும் "தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குப் பெறுகின்றோம். திருப்பலியில் வாழ்த்தொலியாக தொடக்கமாக குருவானவர் மூவொரு இறைவனை அழைத்துதான் செபிக்க திருஅவை கற்பித்துள்ளது. மூவொரு இறைவன் நம்முடன் பயணிப்பவராக இருக்கின்றார். மூவொரு இறைவனில் முழு விசுவாசம் கொள்வோம், விண்ணகப் பேரின்பத்தை இம்மண்ணிலே பெற்று மகிழ வேண்டி அருளை இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**திருஅவைக்காக:** மூவொரு இறைவா, திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உன்னத பணியை சிறிதும் மாறாமல் உடன்பணியாற்றும் அனைத்து அருட்பணியாளர்களையும் ஒன்றித்து அன்பு, பணிவு, கீழ்ப்படிதல் போன்ற சிறந்த பண்புகளோடு மக்களை அன்பு செய்து அரவணைத்து வழிநடத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**நாட்டிற்காக:** ஆற்றலின் இறைவா, உலகைப் படைத்து அதற்கான தலைவர்களை கொடையாக அளித்தமைக்காக நன்றி கூறுகின்றோம். அவர்கள் மக்களை தங்களின் சுயநலத்திற்காக பயன்படுத்தாமல், சகோதர சகோதரி என்ற வாஞ்சையோடு அனைவரையும் சமமாக பாவித்து நடக்கக் கூடிய ஆற்றலையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பங்கிற்காக:** அருள் வரங்களை அளவில்லாமல் அளிப்பவரே, எம் பங்கையும், மக்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் அனைவரும் உம்மால் படைக்கப்பட்டு, அன்பையும், தெய்வ பயத்தையும் அளித்திருக்கின்றீர் என்பதை உணர்ந்து, மூவொரு இறைவனில் விளங்கிய ஒருமைப்பாட்டை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**துன்புறுவோருக்காக:** விடுதலையின் நாயகரே எம் இறைவா, வாழ்வில் துன்பச்சுமைகளால் சோர்ந்து போனவர்களும், கடன்சுமை, தீராதநோய், வேலையின்மை, யாருமற்ற நிலையில் தவிப்போர், பொருளாதார சுமை போன்ற பலவிதமான சுமைகளால் வாடுவோர் அனைவரையும் நீரே சுமைகளை அகற்றி, சுகளித்து மகிழ்விக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**27.05.2024 காண்டர்பரி நகர்ப் புனித அகுஸ்தின் திருப்பலி**

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய தினம் நமது திருஅவை கான்டர்பரி நகர் புனித அகுஸ்தின் அவர்களின் திருப்பலியைச் சிறப்பிக்கின்றது. இவர் உரோமையில் ஆறாம் நூற்றாண்டில் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. உரோமையிலுள்ள தூய ஆன்ட்ரு துறவுமடத்தின் தலைவராக இருந்து பணிகளை செய்து வந்தார். அந்நேரம் திருத்தந்தை முதலாம் கிரகோரியார் "இங்கிலாந்து சென்று நற்செய்திப்பணி செய்ய வேண்டுமென்றதும் சிறிது தயங்கினாலும் இறைவன் திருவுளத்திற்கு பணிந்து நாற்பதுக்கும் மேற்பட்ட அருட்பணியாளர்களை அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்கு நற்செய்தி அறிவிக்க சென்றார். அவரின் பணியை கண்டு அந்நாட்டு அரசர் "கென்டில் எதல்பர்ட்" அவராகவே முன்வந்து ஓர் ஆலயத்தை அளித்தார். இங்கிலாந்தில் பிறமத கோவில்களை அர்ச்சித்து கிறிஸ்தவ கோவில்களாக மாற்றினார். அவரின் இடைவிடா உழைப்பினால் ஏராளமான மக்கள் மனமாற்றம் அடைந்தனர். இதனால் "கான்டர்பரியின் ஆயராக இவர் உயர்த்தப்பட்டார். இங்கிலாந்து மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க தன்னுடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்த புனிதர்

அகஸ்டின் 604ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அதனால் இங்கிலாந்து நாட்டின் பாதுகாவலராக அழைக்கப்படுகிறார்.

இங்கிலாந்து வந்து எட்டு வருடங்களே ஆயினும் பெரும் வெற்றியை அடைந்தார். பொறுமையாகப் போராடியதாலும் கடின உழைப்பாலும், மிஷனரி கொள்கையை ஞானமுடன் செவிமடுத்தாலும் பாகன் ஆலயங்களை இடிக்காமல் அதையே கிறிஸ்துவ ஆலயங்கலாக மாற்றினாலும் "அப்போஸ்தலர்" என்றும் அழைக்கப்பட்ட நமது புனிதர் கான்டர்பரியில் புனித அகஸ்டின் துறவு மடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். ஆகவே புனித அகஸ்டின் நினைவுநாளில் அவரை போன்று மிக ஆர்வத்தோடு அதே நேரத்தில் மனஉறுதியோடு ஆண்டவரின் நற்செய்தி பணியில் பங்கெடுக்க வேண்டுமென்ற நினைவோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

நற்செய்தியின் கருவூலமே இறைவா, திருஅவையின் தலைவரான புனித பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர், மற்றும் அனைத்து திருநிலையினர் தன் முதல் பணியான நற்செய்தி அறிவிப்பை அழமான மனவுறுதியுடனும் சீரிய சிந்தனையுடனும் தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, எங்களை பெயர் சொல்லி அழைத்தவரே, எங்கள் வாழ்வில் உமக்கெதிராக நாங்கள் செய்கின்ற சிறுசிறு தவறுகளை மனமுவந்து மன்னித்து, உம் மந்தைகளை நேரிய வழியிலும், இறைபக்தியிலும், ஞானத்திலும் வழிநடத்தக்கூடிய ஆற்றலை எங்களுக்கு அளித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

உண்மையின் உறைவிடமே, நாட்டில் வாழும் அனைத்து மக்களையும் உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் இன்றைய காலக்கட்டத்திற்கு தகுந்தாற்போன்று தங்களை மாற்றிக்கொண்டு உமக்கெதிராக பல தீயச்செயல்களைச் செய்வோரின் மனங்களை மாற்றி உம் சித்தத்திற்கேற்ப செயல்பட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**31.05.2024 புனித கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்தல் விழா திருப்பலி முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இன்று புனித கன்னிமரியா எலிசபெத்தை சந்தித்த விழாவைச் சிறப்பிக்க ஒன்றுக் கூடியுள்ளோம். "வாக்குறுதியின் பெட்டகம்" யூதர்களிடமிருந்த நாள்வரை அவர்கள்யாவேயின் வழிநடத்துதலையும், இறைப்பிரசன்னத்தையும் மிக ஆழமாக உணர்ந்திருந்தனர். மன்னர் தாவீது மகிழ்ச்சிப் பொங்க தள்ளி யூத மக்கள் கண்டுகளிக்கும் வண்ணம் பேழையின் முன் நடனமாடினார். இதே ஒளியில் அன்னையின் அன்னையும் உலக முடிவுவரை இறைஇயேசுவின் பிரசன்னத்தை மக்களிடையே கொண்டு வந்தவர் என்பதனை நிரூபிக்கும் வகையில் எலிசபெத்தை சந்தித்தபோது அவளது வயிற்றின் குழந்தை உணர்ந்து அக்களிப்பால் துள்ளியதை கண்டு அறிகிறோம். திருப்பேழை பன்னிரண்டு யூத வகையினரையும் எருசலேம் நகரில் தாவீதின் அரியனைமுன் ஒன்றாக கூட்டிச் சேர்த்தது. அதே போன்று எல்லோருக்கும் முதல்வராக, மறைப்பரப்புரையாளராக வானதூதர் வழியாக தமக்குக் கிடைத்த மகிழ்ச்சியானச் செய்தியை சுமந்து அறிவிக்கச் சென்றதன் மூலம் உலகமுடிவுவரை வரவிருக்கும் மறைப்பரப்பு பணியாளருக்கு ஓர் முன்னோடியாக அன்னை அமைந்துவிட்டார். ஆகையால் இறை இயேசுவைப் பின்பற்றும் அனைவரையும் ஒரே மந்தையாக குடும்பமாக கூட்டிச் சேர்க்க உதவுகிறது.

எலிசபெத்தின் உரையாடலில், "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? என்ற முன்னுரிமையும் தந்து பின் அன்னையை புகழுவதாக அமைகிறது. இறைவன் அளித்த வரம் நிறைவேறும் என நம்பியவர் பேறுபெற்றவர் என்ற சொல்லில் அன்னையின் ஆழமான நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. எலிசபெத்திற்கு உதவி செய்கின்ற நேரத்தில் தான் இறைவன் தனக்கு வழங்கிய கொடையை எண்ணி நன்றிப்பாடல் பாடுகிறார். இன்று திருஅவையில் பல இறையியல் பயிற்சிகள் தரப்படுகின்றன. அதில் மரியியல் பயிற்சியும் ஒன்று. இப்பயிற்சி பெற்று பயன்பெற்றோர் பலர். விடுதலை நாயகனாம் இறைஇயேசுவுடன் இணைந்து பணியாற்றும் வல்லமைப் பெற்ற இணை விடுதலை நாயகியாக அன்னை இன்றுவரை செயலாற்றுகிறார். திருநூலிலும் பல நிகழ்ச்சிகள் வழியாக காண்கிறோம். ஆகவே இவ்விழாவினை கொண்டாடி ஆழமாக அன்னையைப்போல்

இறையனுபவமும் இறையுணர்வும் பெற்று சான்று பகிரும் வாழ்வு வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்**

தாயும் தந்தையுமான இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு இறைப்பணியை ஏற்று செயல்படும் அனைத்து பணியாளர்களும் இறைஇயேசுவோடு இணைந்து மக்களை இறையனுபம் பெற்று உமக்கேற்ற மக்களாக, அன்னையைப்போல் உடன்பணியாளர்களாக செயல்பட வேண்டிய அனைத்து வரங்களையும் வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வல்லமையானவரே எம் இறைவா, உம் அன்னையை இறைவன் தேர்ந்ததுபோல் நீர் எங்களையும் எங்கள் குடும்பங்களையும் தேர்ந்தெடுத்திருக்கின்றீர். உம்மைப்போன்றும் அன்னையின் வாழ்வைப் பின்பற்றி எங்கள் சுமைகளையெல்லாம் சுகமாக ஏற்றுக்கொள்ளும் ஆற்றலையும், வல்லமையும், தாராள மனதையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வலிமையின் ஊன்றுகோலே எம் இறைவா, பலவிதமான பிரச்சனைகளாலும், துன்பங்களாலும், நோயினாலும் அவதியுரும் உம் பிள்ளைகளைக் கண்ணோக்கும். அவர்களுக்கு நீரே பக்கபலமாக இருந்து அனைத்து விதமான தொந்தரவுகளிலிருந்து விடுதலையளித்து, வழிநடத்த வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## தந்தை யோசேப்பு நம் குடும்ப வாழ்வின் வழிகாட்டி

- டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை மே 1ந்தேதி தொழிலாளரான புனித யோசேப்பு நினைவைச் சிறப்பித்து மகிழ்கின்றது. திருத்தந்தை 12-ம் பியுஸ், இந்த விழாவை 1955ஆம் ஆண்டு ஏற்படுத்தினார். கம்யூனிசத் தொழிலாளர் நாள் கொண்டாட்டங்களுக்கு மாற்றாக, உழைப்பின் மேன்மையில் கடவுளின் கரங்களைக் காணும் நோக்கில் இது உருவாக்கப்பட்டது. கடவுளின் மாட்சிக்காக உழைத்த புனித யோசேப்பு, நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். அவரது வாழ்வு கடவுளுக்கு உகந்ததாக இருந்தது என்று காண்போம். பொறுப்பு நிறைந்த கணவராகவும், அன்புள்ள தந்தையாகவும் செயல்படுவது எப்படி என்பதற்கு புனித யோசேப்பு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். "கிறிஸ்தவர்கள் என்கின்ற முறையில், யோசேப்பை போன்று இயேசுவுக்காக ஓர் இல்லத்தை உருவாக்க நீங்களும் அழைப்பு பெற்றிருக்கிறீர்கள்" என திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார். நமது குடும்பத்தில் இயேசு வாழ வேண்டுமென நாம் விரும்பினால், புனித யோசேப்பை போன்று கடவுளின் விருப்பத்துக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

மரியாவுடன் இல்லற வாழ்வைத் தொடங்க யோசேப்பு நினைத்திருந்த வேளையில், மரியா கருவுற்றிருந்தச் செய்தி யோசேப்புக்கு எட்டியது. "இது எப்படி நிகழ்ந்தது?" என்பது புரியாமல் அவரது உள்ளம் கலங்கியது. மரியாவின் நன்னடத்தையை நேரில் கண்டிருந்த யோசேப்பு, அவரது கருவுறுதலுக்கு காரணம் அறியாமல் தவித்தார். வேறொருவரின் கருவைத் தம் கருப்பையில் சுமக்கும் பெண்ணைத் தமது மனைவியாக ஏற்றால், நேர்மையாளரான தமது கற்புக்கு இழுக்கு நேரிடும் என நினைத்து மரியாவை ஏற்கத் தயங்கினார். அவ்வேளையில் வானதூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி, "தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில், அவர் கருத்தாங்கியது தூய ஆவியால்தான்" (மத் 1:20) என்ற தெளிவை வழங்கினார். மரியா கருவுற்றது கடவுளின் திட்டம் என்பதை உணர்ந்த யோசேப்பு, வானதூதரின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து தமது மனைவி மரியாவை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு, கடவுளின் மீட்புத் திட்டம் நிறைவேறுவதில் ஏற்பட்ட முதல் தடையை யோசேப்பு தமது கீழ்ப்படிதலால் அகற்றினார்.

கடவுளின் திட்டத்தில் தமது பங்கைச் சரியாகப் புரிந்து கொண்டதாலேயே, யோசேப்பு மரியாவை ஏற்றுக்கொண்டார் என்பது இங்கு தெளிவாகிறது. இறைமகனின் தாயின் கற்புக்கு காப்பாளராக கடவுள் தம்மை நியமித்திருக்கிறார் என்பதை உணர்ந்திருந்த அவர், தமது கற்புள்ள இதயத்தால் மரியாவை மிகவும் அன்பு செய்தார். வாழ்நாள் முழுவதும் மரியாவின் கன்னிமையைப் பாதுகாக்கும் கன்னிக் கணவராக வாழ உறுதியேற்றார். மரியாவின் கற்புக்கும் கன்னிமைக்கும்

களங்கம் ஏற்படும் எதையும் அவர் அனுமதிக்கவில்லை. மரியாவைத் தமது மனைவியாக ஏற்ற அதே நேரத்தில், யோசேப்பு இயேசுவைத் தமது மகனாக ஏற்றுக்கொண்டார். இவ்வாறு, மகனாகிய கடவுளுக்கு கன்னித் தந்தையாகும் பேறு அவருக்கு கிடைத்தது. கன்னி மரியாவின் வயிற்றில் இறைமகன் இயேசு கருவாக இருந்த காலம் முதலே, யோசேப்பு அவரை ஒரு தந்தையின் இதயத்தோடு அன்பு செய்தார். மரியா - யோசேப்பு இடையில் உருவான திருமணப் பிணைப்பின் கனியாக இறைமகன் இவ்வுலகில் தோன்றுவதே கடவுளின் திட்டம் என்பது மறுக்க முடியாத உண்மை.

யோசேப்பு மரியாவைத் திருமணம் செய்தபோது, இறைமகனின் தந்தையாக இருக்கவும் அழைப்பு பெற்றார். உலக மக்களின் மீட்புக்காக மனித உடலேற்ற ஆண்டவர் இயேசு மற்ற மனிதர்களைப் போன்று ஒரு குடும்பத்தில் பிறக்கவே விரும்பினார். யோசேப்புடன் ஏற்பட்ட மண ஒப்பந்தத்தின் விளைவாகவே, இறைமகன் மரியாவின் கருப்பையில் மனித உடலேற்று கருவாக உருவானார். ஆகவே, யோசேப்பு கன்னித் தந்தையாக வாழும் தமது அழைப்பினை சிறிதளவும் குறைவின்றி நிறைவேற்றினார் என்பது முற்றிலும் உறுதி. மரியாவின் கற்புள்ள காப்பாளராகவும், இறைமகன் இயேசுவின் முன்மாதிரி மற்றும் வழிகாட்டியாகவும் யோசேப்பு வாழ்ந்தார் என்பதில் சந்தேகமில்லை. கன்னி மரியாவுக்கு அடுத்து, கடவுளையே தம் கரங்களில் ஏந்துகின்ற, மார்பில் தூங்கச் செய்கின்ற பெரும்பேறு பெற்றவர் யோசேப்பு. ஓர் எளிமையான தச்சராக வாழ்ந்து வந்த நாசரேத்தின் யோசேப்பை, இறைமகனையும் அவரது தாயையும் பாதுகாத்து பராமரிக்கின்ற ஒரு நம்பகமான ஊழியராக கடவுள் தேர்ந்தெடுத்ததை அவரது மேன்மையை நமக்கு காட்டுகிறது.

"ஓர் அரசியைத் திருமணம் செய்கிறவர் அரசராகிறது உலக வழக்கமாக இருக்கிறதே. அவ்வாறே வானதூதர்களுக்கும் விண்ணவர்களுக்கும் அரசியாக இருக்கிற கடவுளின் தாயைத் திருமணம் செய்த யோசேப்பு, விண்ணவர்கள் எல்லாருக்கும் அரசராக இருக்கிறார்" என்று புனித லெயோனார்து கூறுகிறார். "புனித யோசேப்பு அனைத்து புனிதர்களையும்விட மேலான, வானதூதர்களை விடவும் கூட மேலான ஒரு மாண்பைக் கொண்டிருக்கிறார்" என்பது அவரைப் பற்றி புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் கூறுகின்ற சாட்சியாக இருக்கிறது. யோசேப்பின் நேர்மைக்கும் பெருந்தன்மைக்கும் கிடைத்தப் பரிசே மீட்புத் திட்டத்தில் அவருக்கு கிடைத்த மேன்மையான இடம் என்று கூறலாம். பொறுப்பு நிறைந்த கணவராகவும், அன்புள்ள தந்தையாகவும் செயல்பட புனித யோசேப்பு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார். கடவுளின் விருப்பத்துக்கு நம்மைக் கையளித்து வாழவும், கடவுளால் நமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட எல்லாரையும் அக்கறையுடன் பாதுகாக்கவும் அவர் நமக்கு வழிகாட்டுகிறார். ஆகவே, அவரை நம் குடும்ப வாழ்வின் வழிகாட்டி என்பதில் ஐயமில்லை.

உழைப்பாளர்கள் அனைவரின் சிறந்த மாதிரியாகவும் புனித யோசேப்பு இருக்கிறார் என்பது உண்மை. அவர் தமது செயல்களில் ஒரு நேர்மையாளராகத் திகழ்ந்தார் என்று நற்செய்தியில் காண்கிறோம். அவர் தச்சுத் தொழிலால் கிடைத்த வருவாயைத் தமது குடும்ப நலன்களுக்காகச் செலவிட்டார். தமது மகன் இயேசுவை மிகுந்த பொறுப்புடன் வளர்த்து, மக்கள் அறிந்த ஒரு தச்சராக அவரை உருவாக்கினார். இயேசுவைப் போன்றே, இன்றைய இளைஞர்களும் யோசேப்பைத் தங்கள் வழிகாட்டியாக ஏற்க வேண்டும். "புனித யோசேப்பு மீதான பக்தி கிறிஸ்தவத் தாய்மார்களுக்கு மிக மதிப்புக்குரிய ஒன்று, ஏனெனில் அவர் குடும்பங்களின் புரவலராக இருக்கிறார்" என்கிறார் புனித பீட்டர் ஜூலியன் எய்மர்ட். கடவுளிடம் முழு நம்பிக்கை, செயல்களில் நேர்மை, பொறுமை, குடும்பத்தார்மீது அக்கறை மற்றும் பொறுப்புணர்வு ஆகியப் பண்புகளை புனித யோசேப்பிடம் இருந்து கற்றுக்கொள்வோம். அவரது வழிகாட்டுதலைப் பின்பற்றி, நமது வாழ்வை கடவுளுக்கு உகந்ததாக வாழ்ந்தால் விண்ணகத்தை மண்ணகத்திலே காணலாம்.

## செபமாலை - அன்னை தந்த வெற்றியின் மாலை

அதிகம் பூக்கும் மல்லிகை மணத்தோடு சேர்ந்தே வீசும் இம்மாதம் நம்மை மகிழ்விக்கின்றது. இந்த மாதம் முழுவதையுமே வணக்க மாதம் என்றும், தேவ தாயின் மாதம் என்றும் காலங்காலமாக கத்தோலிக்க மக்கள் ஒரு சிறப்பு விழாவாகக் கொண்டாடுகிறார்கள். வீடுகளிலும் சரி, பங்கு தலங்களிலும் சரி வணக்க மாதத்தை சிறப்பாக கொண்டாட பீடங்கள் அமைத்து அலங்காரங்கள்

செய்து அண்டை வீட்டாரோடு சேர்ந்து உணவுகள் பரிமாறி கொண்டாடும் விழாவாக இருக்கிறது. இந்த மே மாதத்தில் அன்னையிடம் நாம் செபம் செய்யும்போது நம்மோடு சேர்ந்து பிற மதத்தினரும் செபம் செய்வது ஒரு சிறப்பு அம்சமாகும். ஆகவே இம்மாதத்தில் குடும்பமாக எல்லோரும் செபமாலை தியானிப்போம். நமது நாட்டின் சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு நாட்டுக்கு நீதியான ஒரு அரசாட்சி அமைய வேண்டும் என்றும், சமாதானம் ஏற்பட்டு அமைதியுடன் வாழவும், வேற்றுமையில் ஒற்றுமையோடு சுமூகமான வாழ்க்கையை வாழ இம்மாதம் முழுவதும் அன்னையை நோக்கி மன்றாடுவோம்.

நம் திருஅவையின் பக்தி முயற்சிகளில் ஒன்று செபமாலை. செபமாலையில் ஒவ்வொரு முறையும் "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று சொல்லும்போதும், ஒவ்வொரு மணியும் ஒரு ரோசாப்பூவாக தன்மேல் விழும் என்று 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்னையே புனித தோமினிக்கிற்குக் கூறியதாக வரலாறு தெரிவிக்கிறது. அப்படியென்றால் 53 மணிகள்கொண்ட செபமாலையை முடிக்கும்போது ஒரு ரோசாத் தோட்டத்தையே நாம் அன்னைக்குப் பரிசாக அளிக்கிறோம் அல்லவா?

செபமாலை "ஏழைகளின் திருப்பாடல் என்றும், நற்செய்தியின் சுருக்கம் என்றும் அழைக்கப்படுகிறது". திருப்பலிக்குப் பின் அடுத்த அதிக மாபெரும் தெய்வீகம் கொண்டது செபமாலை என்றார் புனித சார்லஸ் பொரோமேயு. செபமாலை சொல்லும் ஒரு படையை எனக்குத் தாருங்கள். இந்த உலகை வென்று காட்டுகிறேன் என்றார் திருத்தந்தை 11ஆம் பத்திநாதர். செபமாலை நமக்கு ஆண்டவரிடமிருந்து வரங்களைப் பெற்றுத் தரும். நாம் செபிக்கும் செபங்களிலேயே அழகானதும், வளமையானதும் செபமாலையே. அது அன்னை மரியாவின் உள்ளத்தைத் தொடும் செபமாகும் என்கிறார் திருத்தந்தை பத்தாம் பத்திநாதர். மேலும் மரியாவின் கோணத்தில் இயேசுவை உற்றுப்பார்க்க செபமாலை உதவுகிறது. செபமாலையின் வழியாக கிறிஸ்துவின் பொறுமை, அமைதி, மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம் என்கிறார் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர்.

செபமாலை ஓர் அற்புதமான செபம். எளிமையிலும், ஆழத்திலும் ஆவே மரியா பின்னணியில் நம் ஆன்மாவின் கண்கள் முன்னே இயேசு கிறிஸ்துவின் வரலாற்றுச் சிறப்பு நிகழ்வுகள் கடந்து செல்கின்றன என்கிறார் திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர். ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் செபமாலையின் மறையுண்மைகளைத் தியானித்தால் புனிதராவோம் என்று மிகுந்த பொறுமையிலும், அன்பினாலும் 70000 கால்வின் மார்க்கத்தினரை மனந்திருப்பிய புனித பிரான்சிஸ் சலேசியார் என்கிறார்.

ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்கிறவனிடம் பிசாசின் முயற்சிகள் பலனற்றுப் போகும். இதை மகிழ்ச்சியோடு என் குருதியினால் கையொப்பமிட்டு அறிக்கையிடத் தயார் என்றார் புனித லூயிதெ மாண்ட்போர்ட். செபமாலையின் அரசியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் - திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் லோரெட்டோ மன்றாட்டு மாலையில் செபித்தார்.

அன்னை மரியா அருட்கொடைகளின் இருப்பிடம், செபமாலை நம்மை இவ்வுலகத் தீமைகளிலிருந்து பாதுகாக்க அன்னை உருவாக்கிய கோட்டை. பிதாப்பிதாக்களுடைய நம்பிக்கை, இறைவாக்கினர்களின் தியானம், அப்போஸ்தலர்களுடைய ஆதாரம், வேதசாட்சிகளின் நம்பிக்கையின் நங்கூரம், சகல மோட்சவாசிகளுக்கும் பிரியமான பொக்கிஷம், உத்தரிக்கிற ஆன்மாக்களை கரை சேர்க்கிற ஓடம், உலக மாந்தர் விண்ணகத்திற்கு ஏறிச்செல்ல உதவும் ஏணி, கடவுளையும், மனிதரையும் இணைக்கும் சங்கிலி, உலகத்தின் தீமைகளை வெல்லும் சிறந்த ஆயுதம் .... என்று புனித பியோ செபமாலையின் சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம் என்றார்.

செபமாலையின் முக்கியத்துவத்தை அறிந்ததினால்தான் கிட்டத்தட்ட அனைத்துப் புனிதர்களுமே தங்கள் புனித வாழ்க்கையில் செபமாலையைத் தவறாமல் சொல்லி அவர்களது வாழ்க்கைச் சரித்திரங்களை வாசிக்கும்போது அறிய முடிகிறது.

செபமாலை செபிப்பது ஒரு தியானப் பயிற்சியும் ஆகிறது. வாய் செபிப்பது, காது கேட்பது, தொடுதல் உணர்வோடு விரல்கள் செபமாலை மணிகளிடையே நகர்வதும், அதைக் கண்கள் பார்ப்பதும், சுவாசம் நுகர்வதாகவும் இருப்பதாலும், மனமும் சிந்தனையும் மறையுண்மைகளை அசைபோடும் ஐம்புலன்களும் ஒரு நேர்க்கோட்டில் நிறுத்தப்படுவதால் இதுவும் ஒரு தியானப் பயிற்சியே ஆகும். செபமாலை மனங்கள் அணிந்து கொள்ள மரியாவால் அருளப்பட்ட மாலை, கடவுள் பாதி, மனிதர் பாதி கலந்த சேதி செபமாலை செபத்தின் நியதி. அருள் நிறைந்த மரியே வாழ்க என்ற மங்கள வார்த்தைகளே ஐம்பது மூன்று மணிகளிலும் மாறாத கல்வெட்டுகள் ஆயின. பத்து மணிகளிடையே பத்திரமாக மறைந்திருப்பது தேவ இரகசியங்கள் என்ற இறைவனின் மீட்புச் சரித்திரம். மகிழ்ச்சியும், துக்கமும், மகிமையும், ஒளியும், இன்ப துன்பங்கள் நிறைந்த மனித வாழ்க்கையின் கோட்பாட்டைச் சொல்வது செபமாலை. இத்தகு அற்புத வல்லமை நிறைந்த

செபமாலையை நாம் ஒவ்வொருவரும் அனுதினமும் செபித்து தேவ அன்னைக்கு பூமாலையாகச் சூட்டும் பொழுது, அவரது மகன் இயேசு அதிகமாக இன்புறுவது மட்டுமன்றி, இறையருளை கேட்பவர்க்குக் கேட்ட வரங்களை நிறைவாக அள்ளித் தருகிறார். இதை நாம் நம் அனுபவத்தில் உணர முடியும். உலக சமாதானம் மற்றும் நம் குடும்பங்களிலும் தனிப்படட வாழ்விலும் அமைதி கிடைத்திட சக்திமிக்க அன்னையின் ஆயுதத்தைக் கையில் எடுப்போம். குடும்பத்தார் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லும் வழக்கம் போற்றுதற்குரியது. மாலை நேரத்தில் செபமாலை செபிக்கும் குடும்பம் எத்துணை அழகானது. என்கிறார் திருத்தந்தை ஆறாம் பெனடிக்ட். குடும்ப செபமாலை ஒரு தாயின் மன்றாட்டு ஆண்டவரது உள்ளத்தையே கரைக்கிறது எனலாம். இக்காலத்தில் உலகப்பற்று, அழிந்து போகும் பொருட்கள்மீது அதீத பேராவல், தகவல் தொடர்புச் சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்தி சிக்கிச் சீரழியும் நம் குடும்பத்து இளைய தலைமுறைகள், குடும்பக் கட்டுப்பாடு, மதச்சார்பற்ற சீர்திருத்தத் திருமணங்கள், விவாகரத்து, சிசுக்கொலை (கருக்கலைப்பு) போன்ற பல காரணங்களால் குடும்பத்தைக் கலைக்கவும், அழிக்கவும் முயலும் அலகையின் தந்திரங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றக்கூடியவர் செபமாலை இராக்கினியும், செபமாலையுமே என்பது உறுதி.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ் ச.ச

### உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்பும் அமைதி - திருத்தந்தை

மென்மை, அருகிருப்பு, இரக்கம் என்னும் கடவுளின் பண்பு நலன் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்று கூறுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ். அமைதி என்பது நாம் மன்னிக்க நினைக்கும்போது உருவாகின்றது, இது கடினமாக இருந்தாலும், நமது உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்புகின்றது என்றும், தாத்தா, பாட்டி மற்றும் வயதில் மூத்தவர்களுடன் உரையாடுவதன் வழியாக எதிர்காலத்திற்கான அடிப்படை வேர்களை நம்மால் கண்டறிய முடிகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏப்ரல் 25 வியாழனன்று வத்திக்கான் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் ஹங்கேரி நாட்டுத் திருப்பயணிகள் ஏறக்குறைய 1200 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளைய தலைமுறையினருக்கு நம்பிக்கையின் எதிர்காலத்தை வழங்க வேண்டும், போரை அல்ல; மகிழ்வின் தொட்டில்களை வழங்க வேண்டும் கல்லறைகளை அல்ல, சகோதரத்துவத்தை வழங்க வேண்டும் சுவர்களை அல்ல, ஐரோப்பாவிற்காக செபிக்க வேண்டும், அமைதியைக் கட்டியெழுப்ப வேண்டும், என்ற நோக்கத்தில் ஹங்கேரிக்குத் தான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தையும் நினைவு கூர்ந்தார் திருத்தந்தை.

### பாகிஸ்தான் கிறிஸ்தவ மக்களுக்காக நிதி திரட்டும் மறைமாவட்டம்

பாகிஸ்தானின் தேசிய சட்டமன்ற முன்னாள் எதிர்கட்சித் தலைவரான ராஜா ரியாஸின் தந்தை 1960 ஆம் ஆண்டில் ஏழை கிறிஸ்தவர்களை அக்பராபாத்தில் இலவசமாகத் குடியேற அனுமதித்தார். பாகிஸ்தானின் அக்பராபாத் பகுதியில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக தாங்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியேற நீதிமன்றம் அறிக்கைவிடுத்த நிலையில் பாதிக்கப்பட்ட அக்கிறிஸ்தவர்களின் வாழ்விற்காக நிதி திரட்டத் தொடங்கியுள்ளது மத்திய பாகிஸ்தானின் மறைமாவட்டம். அண்மையில் பைசலாபாத் மறைமாவட்டத்தில் உள்ள அக்பராபாத் பகுதியில் வாழ்ந்து வரும் 75 கிறிஸ்தவ குடும்பங்கள் தாங்கள் தங்கியிருந்த 57 ஏக்கர் நிலப்பகுதிகளிருந்து வெளியேற நீதித்துறையால் பணிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்யும் வகையில் 7 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டு நிதி திரட்டப்பட்டு வருகின்றது.

### முதியவர்கள் மற்றும் பேரக்குழந்தைகளைச் சந்திக்கிறார் திருத்தந்தை!

முதியோர்களின் உரிமைகள் மற்றும் சமூகத்தின் தொடர்புடைய கடமைகளை முன்னிலைப்படுத்தி, உணர்த்தும் கிறிஸ்தவ விழுமியங்களை இந்நிகழ்வு ஈர்க்கிறது. இத்தாலியில் 1 கோடியே 40 இலட்சம் முதியவர்கள் இருந்தபோதிலும், அவர்கள் தொடர்பான அரசியல், பொருளாதார, மத மற்றும் கலாச்சார பிரச்சனைகளை நிவர்த்தி செய்வது குறைவாக உள்ளது என்று செய்தியாளர்கள் சந்திப்பின்போது

கூறினார் வாழ்வியல் பாப்பிறை கலைக்கழகத்தின் தலைவர் பேராயர் வின்சென்சோ பாலியா (Vincenzo Paglia)

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது புதன் பொது மறைக்கல்வி உரையின்போது வழங்கியுள்ள முதுமை குறித்த அவரது பத்தொன்பது மறைக்கல்வி படிப்பினைகளும், மூன்றாம் வயதைக் கருத்தில் கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை சுட்டுகின்றன என்றும் எடுத்துக்காட்டினார் பேராயர் பாலியா. எல்லாத் தலைமுறையினரும் ஒருவரையொருவர் சார்ந்திருப்பதாலும், ஒருவரையொருவர் பிரிந்து வாழ முடியாது என்பதாலும், தாத்தா பாட்டிகள் தங்கள் பேரக்குழந்தைகளுடனான பிணைப்பின் வழியாகத் தலைமுறைகளுக்கு இடையேயான அரவணைப்பு, புரிதல் மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்க உதவ முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார் பேராயர் பாலியா

**பூர்வகுடி இளையோர் கலாச்சாரத்தின் பாதுகாவலர்கள் : திருப்பீடம்**

பூர்வகுடி மக்களின் அடையாளத்தின் முக்கிய அங்கமாக இருக்கும் மூதாதையர் நிலங்கள், இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் அவ்விளையோர் முன்னணியில் உள்ளனர் : பேராயர் புயடிசநைடந ஊயஉஉயை. பூர்வகுடி இளையோர் தலைமுறைகளுக்கு இடையே உறவுப் பாலங்களாகவும், தலைமுறைகளுக்கு இடையேயான உரையாடல், புரிதல் மற்றும் அவர்களின் சமூகங்களுக்குள்ளேயே ஒத்துழைப்பை வளர்பவர்களாகவும் திகழ்கின்றனர் எனத் தெரிவித்தார் ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி பேராயர் Gabriele Caccia.

"பூர்வகுடி மக்களின் உரிமைகள் மீதான ஐ.நா தீர்மானத்தின் பின்னணியில் பூர்வகுடி மக்களின் சுயநிர்ணய உரிமையை மேம்படுத்துதல்: பூர்வகுடி இளையோரின் குரல்களை வலியுறுத்துதல்" என்ற கருப்பொருளில் நிகழ்ந்த இந்த அமர்வில், பூர்வகுடி மக்களின் பிரச்சனைகளுக்கான நிரந்தர மன்றத்தின் பணியை திருப்பீடம் அங்கீகரிப்பதாக கூறியதுடன், இந்த மையகருத்தின் அடிப்படையில் தனது சிந்தனைகளையும் பகிர்ந்துகொண்டார் பேராயர் Caccia. நீதியான மற்றும் மனிதாபிமான உலகைக் கட்டியெழுப்புவதற்காகவும், ஒதுக்குதல், வீண்விரயம் மற்றும் ஏழ்மைக்கு எதிராகப் போராடுவதன் வழியாகவும், அவர்களின் கலாச்சாரங்களையும் வேர்களையும் (roots) பாதுகாக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பூர்வகுடி இளையோரை ஊக்குவித்ததையும் தனது உரையில் எடுத்துக்காட்டினார் பேராயர் Caccia

**அனைத்து பொருளாதார இலாபங்களையும் தாண்டியது மனித மாண்பு**

அனைத்துலகக் குற்றங்கள் என அறியப்படும் மனித குலத்திற்கு எதிரானக் குற்றங்கள் தடை செய்யப்படுவது இன்றியமையாதது என அனைத்துலக சட்ட அமைப்பு அறிவித்திருப்பது சரியான வழிமுறை எனத் தெரிவித்துள்ளார் ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி. மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற தலைப்பில் ஐ.நா. பொதுஅவையின் 78-வது அவைக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி பேராயர் Gabriele Caccia அவர்கள், மனிதகுலத்திற்கு எதிரானக் குற்றங்களை அனைத்துலகக் குற்றங்களாக அங்கீகரிப்பது, அனைத்துலக ஒத்துழைப்புக்கும், கொடுமையான குற்றங்கள் தடுக்கப்படுவதற்கும், தண்டிக்கப்படுவதற்கும் உதவும் என்றார்.

மனித குலத்திற்கு எதிரானக் குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும் மற்றும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், தடுக்கப்படுவதற்கான விதிமுறைகள் போதுமான அளவு பின்பற்றப்படுவதில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார் திருப்பீடப் பிரதிநிதி பேராயர் காச்சா. நாட்டு நலன் என்ற காரணத்தைக் காட்டி எவரும் மனித குலத்திற்கு எதிரானக் குற்றங்களை நியாயப்படுத்த முடியாது என்பதையும் ஐ.நா. பொது அவையில் ஆற்றிய உரையில் எடுத்தியம்பினார் பேராயர் காச்சா.

# தலைப்பு

மே மாதம் அன்னை மரியாளின் மாதம். இதை சிறப்பாய் கொண்டாட திருஅவை நம்மை அன்போடு அழைக்கின்றது. இம்மாதத்தில் அன்னை மரியாளின் பக்தியானது உலகமெங்கிலும் பக்தி பாசத்துடனும், நம்பிக்கையுடனும் உற்சாகமாக, கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கொண்டாட்டம் ஒவ்வொரு பங்கிலும் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் செபமாலையுடன் கூடிய திருப்பலியும், தேர்பவனியும், சிறப்பு மறையுறைகளும் அன்னை மரியாளின் புதுமைகளை நினைவுக் கூர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னை மரியாளை குடும்பமாகவும், அன்பியங்களாகவும், தங்களின் பங்குகளில் வரவேற்று அவரின் புகழ்பாடி அவரை வணங்கி, செபித்து, சிறப்பு செய்ய இவ்வணக்க மாதத்தை நாம் வரவேற்று சிறப்பு செய்வோம்.

பாரம்பரியமிக்க இவ்வணக்கமாதா பக்தி முயற்சி, 13ம் நூற்றாண்டில் துவங்கியது. பொதுவாக தொடக்கக் காலத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாதவர்களால் கொண்டாடப்பட்ட ஒரு பொது விழாவை, கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் இப்பொதுவிழாவைத் தழுவிக்கொண்டு இந்த பொது கொண்டாட்டத்தை மரியன்னையின வணக்கமாதமாகக் கொண்டாட்டமாக சிறப்பித்துக், கொண்டாடி வந்தார்கள். 18ம் நூற்றாண்டில் இந்த வணக்கமாத கொண்டாட்டம், குறிப்பாக இயேசு சபையினரிடையே மிகவும் புகழ்பெற்று விளங்கியது. பிறகு இந்த பக்தி கொண்டாட்டம் உலகமெங்கும் பரவியது.

வணக்க மாதத்தில் மரியன்னை பக்தி முயற்சி பல திருத்தந்தையர்களால் ஊக்குவிக்கப்பட்டது. திருத்தந்தை பதினோராம் பத்திநாதர், திருத்தந்தை ஆறாம் சின்னப்பர், மற்றும் புனித இரண்டாம் ஜான்பால் போன்றோர்களால் இப்பக்தி முயற்சி புகழ்பெற்று மிகுந்த மகிழ்வுடனும், நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும், மரியன்னையை புகழ்ந்துப்பாடி, செபித்து, அவரை பெருமைப்படுத்தி, வணங்கி கொண்டாடியது.

நமது அன்னை மரியாளின் எடுத்துக்காட்டான வாழ்வும், அவரின் அர்ப்பண வழிகாட்டுதலும், சிறப்பாக அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து, தூய ஆவியின் வல்லமையால் கடவுளின் சித்தப்படி நடந்து நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும், தூண்டுதலாகவும் இருக்கின்றார். மரியன்னையின் வணக்க மாதா பக்தி முயற்சி குறிப்பாக பாஸ்கா காலத்திலும், தூய ஆவியாரின் வருகை காலத்திலும் அதிலும் சிறப்பாக திருமுழுக்கு, உறுதிபூசுதல், நற்கருணை போன்ற அருட்சாதனங்களால் மரியன்னையின் பக்தி சிறப்பானதாக உணர்ந்துக் கொண்டாடப்படுகிறது. எனவே, இவ்வன்னைக்கு செபமாலை செய்து, பாடல்பாடி, தேர்பவனியில் கலந்துக்கொண்டு, திருப்பலியில் பங்கேற்று இம்மாதத்தை வணக்கத்துடன் கொண்டாட நம்மை அழைக்கிறது.

இறுதியாக திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் சொல்வதுபோல வணக்கமாதம் அருளின் மாதம், கடவுளின் அருட்கொடைகளையும், இரக்கத்தையும், அன்பையும் கொண்டாடும் மாதம். மரியன்னையை நாம் கொண்டாடுவதிலும் அவள் புகழ் பாடுவதிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கொண்டாடி, அவர் புகழ்பாடி நம் அன்னையை மகிழ்விப்போம்.




பங்குகளுக்கிடையேயான
VBS கொண்டாட்டம்...

மே 11 2024
சனிக்கிழமை


உங்கள் பங்கில் VBSல் கலந்துக் கொண்டு
போட்டிகளில் பங்கேற்ற பிள்ளைகளின்
திறமைகளை சென்னை முழுவதும்
உள்ள பங்குகளுக்கு அறிமுகப்படுத்த
ஓர் அறிய வாய்ப்பு

வாருங்கள்...
மகிழ்ந்து கொண்டாடுங்கள்...

+91 9385201453

பலிப்பீட
சிறார்கள்
முகாம்

மே
7-8
2024



அனுமதி இலவசம்

இடம் :
தொன் போஸ்கோ – எண்ணூர்

விபரங்களுக்கு
+91 9385201453

சிறார்களின்
திருவிருந்துக்கான
மறைக்கல்வி

Catechism for First Holy Communion




இப்போது
விற்பனையில்




சிறார்களின்
உறுதிப்பூசுதலுக்கான
மறைக்கல்வி

Catechism for
Sacrament of Confirmation

## (எண்ணூரில், மே 13 முதல் மே 23 வரை)

# தீபகம் நடத்தும்

TO SHARE THE LIGHT

**கலை வழி - இறைமொழி** | **இசை வழி - இறைமொழி**

## தீபகக் கலைக்குழுக்கள்

சென்னை மாநிலம் முழுவதிலுமுள்ள 5 இடங்களில் கலைக்குழுக்கள் உருவாகுகின்றன.
**பாடல், நடனம், இசை, நாடகம்** மற்றும் பல பயிற்சிகள் **இலவசமாக** அளிக்க முன்னெடுத்துள்ளோம்.
சென்னை (பேசின் பாலம்), ஜோலார்பேட்டை, வீரளூர், தென்னங்குடி, கெடிலம் என்ற 5 இடங்களை மையமாகக் கொண்டு ஒவ்வொரு இடத்திலும் ஒரு கலைக்குழுவைத் துவங்கி பயிற்சி அளிக்க இருக்கின்றோம்.
இதில் விருப்பமுள்ளவர்கள் கலந்துக் கொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் விபரங்களுக்கு : **தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 Deepagam Don Bosco

அன்பு நண்பர்களே, **தீபகம்** மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

01380530000007612@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 Deepagam Don Bosco

www.upiqrcode.com


தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10